## நக்கல் நமசிவாயம்




Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

## இன்றிரவு மீண்டும் முடங்கும் நாடு

### இராணுவத் தளபதி ஷவேந்திர அறிவிப்பு

நாட்டில் இன்றிரவு 10 மணிமுதல் 25ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை 30 மணித்தியாலங்களுக்கு மீண்டும் பயணக்கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படும் - என்று இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா கூறினார்.

02

மலர் : 02, இதழ்: 261 பிலவ வருடம், ஆனி மாதம் 09ஆம் திகதி புதன்கிழமை (23.06.2021) ஹிஜ்ரி - 1442, துல்கஹ்தா பிறை - 11, 0115886187 - பக்கங்கள் 16 விலை ரூ.30

## இன்று எம்.பியாகிறார் ரணில்; சபையில் 10 மணிக்கு ஏற்பு



•யோ.தர்மராஜ்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று நாடாளுமன்றத்தில் எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் படுதோல்வியடைந்த ஐக்கிய தேசியக் கட்சி, தங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளுக்கமைய கிடைக்கப்பெற்ற...

02

## காணாமல்போனவர்கள் அலுவலக புதிய நியமனங்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கவலை



இலங்கையில் காணாமல்போனவர்கள் அலுவலகம் இழப்பீட்டு அலுவலகத்திற்கான சமீபத்தைய நியமனங்கள் குறித்தும் நாட்டின் சமீபத்தைய பயங்கரவாத தடைச்சட்ட விதிமுறைகள் குறித்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செலே பச்செலெட் கரிசனை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 47ஆவது அமர்வின் ஆரம்பத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இஸ்லாமியர்களை...

02

## ஆணையாளரின் கருத்து குறித்து ஆராய்கிறோம்

### அரசாங்கம் தெரிவிப்பு

• யோ.தர்மராஜ்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இலங்கை குறித்து தெரிவித்துள்ள கருத்து குறித்து அரசாங்கமும் வெளிவிவகார அமைச்சும் கவனம் செலுத்திவருவதோடு, அதற்கென எடுக்க...

02

# அரசியல் கைதிகளை விடுவிக்க கோரிக்கை!

### அமைச்சர் நாமல் சபையில் வலியுறுத்து

•யோ.தர்மராஜ்

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் நீண்டகாலமாக சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமென விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சபையில் கோரிக்கையை முன்வைத்ததுடன், சட்ட மா அதிபர் திணைக்களம் அல்லது புனர்வாழ்வுத் திட்டத்தினூடாக இவர்களுக்கு நீதியை வழங்கும்படியும் வலியுறுத்தினார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று ஆரம்பமான சபை அமர்வில் கலந்து கொண்டபோது, வாய்மூலமான வினாக்களுக்கான விடை நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் சபையில் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நீதித்துறையிலும் சிறைச்சாலை யிலும் ஒருசில...

02



## பேஸ்புக் பதிவுகளுக்காக நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது

### சபையில் சாணக்கியன் தெரிவிப்பு



•சபை செய்தியாளர்கள்

பேஸ்புக்கில் வெளியிடப்பட்ட பதிவுகளுக்காக கடந்த ஆண்டு 100இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் அரசாங்கத்தால் கைதுசெய்யப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நாடாளுமன்றில் நேற்று தெரிவித்தார்.


இந்த இளைஞர்கள் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதால் அவர்கள் ஒரேநேரத்தில் விடுவிக்கப்பட வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும்...

02

## பொதுவான பிரச்சினைகளில் ஒத்துழைக்க இலங்கை - இந்தியா இடையே உடன்பாடு

### வெளிவிவகார அமைச்சு அறிக்கை





பிராந்தியத்தின் பொதுவான பிரச்சினைகளில் ஒத்துழைப்பதற்கு இந்தியாவும் இலங்கையும் உடன்பாடு கண்டுள்ளதாக கொழும்பில் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை - இந்திய வெளிவிவகார அமைச்சர்மார் தொலைபேசியூடாக நடத்திய உரையாடல் குறித்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்திய வெளியுறவு அமைச்சருடன் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும்..

02

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நட்டஈடு இரு வாரங்களில்

### அமைச்சர் டக்ளஸ் சபையில் தகவல்



• யோ.தர்மராஜ்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனத்திடமிருந்து இரு வாரங்களுக்குள் முதல்கட்ட நட்டஈடு கிடைக்கவுள்ளதாகவும் அதன்பின்னர் பாதிக்கப்பட்ட மீனவ தொழிலாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளதாகவும் கடற்றொழில்...

02

## யாழில் குழந்தைகளை தாக்கும் கொரோனா!

### 3 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மூவர் உட்பட மேலும் 14 பேருக்கு தொற்று

யாழ். குடாநாட்டில் அண்மைய நாட்களில் தொடர்ச்சியாக பச்சிளம் குழந்தைகள் கொரோனா தொற்றுக்கு இலக்காகும் சம்பவங்கள் அதிகரித்துவரும் நிலையில் 49 நாட்கள், 6 மாதம், 3 வயது குழந்தைகள் உட்பட மேலும் 14 பேருக்கு...

02



நாட்டில் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியினர் ராஜகிரியவில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

## கொக்கிளாயில் தமிழர்களின் 44 ஏக்கர் காணிகள் அபகரிப்பு

முல்லைத்தீவு - கொக்கிளாய் கிழக்கில் கனியமணல் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக தமிழ் மக்களுக்குச் சொந்தமான சுமார் 44 ஏக்கர் காணிகளை அரச வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அமைச்சின் கீழான இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் கம்பிகளாலான வேலி அமைத்து ஆக்கிரமித்துள்ளது.

இவ்வாறு இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டுமென...

02

## பயங்கரவாத தடைச்சட்டத்தை ஆராய்ந்து புதிய திருத்தங்கள்

### நீதியமைச்சர் சபையில் அறிவிப்பு



• யோ.தர்மராஜ்

நாட்டில் நீண்டகாலத்திற்கு முன்னர் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கமைய, தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாத, நாட்டுக்கு பொருத்தமான, மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை ஆராய்ந்து மாற்றங்களை முன்னெடுப்போம் - என நீதி அமைச்சர் அலி சப்ரி சபையில் தெரிவித்தார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று இடம்பெற்ற சபை அமர்வில்...

02

## நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகரிடம் கையளிப்பு

எரிசக்தி அமைச்சர், சட்டத்தரணி உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டது.

எரிபொருள் விலை ஏற்றத்திற்கான எதிர்ப்பு உள்ளிட்ட சில விடயங்களை முன்னிறுத்தி இந்த நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்லவினால் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகரிடம் நேற்று கையளிக்கப்பட்டது.



# ரிஷாட் பதியுதீன் விடுதலை விவகாரம்;

## பலவந்தமாக தடுத்து வைக்கப்படவில்லை

### அமைச்சர் கெஹேலிய

•யோ.தர்மராஜ்

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் மற்றும் அவருடைய சகோதரர் உள்ளிட்டோர் சட்ட விதிமுறைகளுக்கமைய தடுத்துவைக்கப்பட்டுள்ளாரே தவிர, பலவந்தமாக தடுத்து வைக்கப்படவில்லை - என அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில்...

02



## ரிஷாட் - ஷானி விடயத்தின் தவறுகளை சரிசெய்க!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

•யோ.தர்மராஜ்

பல மாதங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள ரிஷாட் பதியுதீன் எம்.பி. மற்றும் ஷானி அபேசேகரவின் விடயத்தில் செய்த தவறை நிவர்த்திசெய்யுமாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் வலியுறுத்தியுள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ...

02



## கொக்கிளாயில்...

முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் நேற்று கொக்கிளாய் பகுதிக்கு நேரில் சென்று ஆராய்ந்தனர்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது ,

கொக்கிளாய் கிழக்குப் பகுதியிலுள்ள எமது தமிழர்களுடைய பூர்வீக காணிகளை இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் அபகரித்துள்ளது.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின், புல்மோட்டைப் பகுதியில் அமைந்துள்ள அந்த இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தினூடாக, முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் உள்ளிட்ட பகுதிகளிலும் கனியமணல் அகழ்வதற்கான ஆயத்தப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஏற்கனவே கடந்த இரண்டுவருடங்களுக்கு முன்பாக இந்த கொக்கிளாய் உள்ளிட்ட பகுதிகளில் கனியமணல் அகழ்வதற்கான முன்னெடுப்புக்கள் இடம்பெறுவதாக அப்பகுதிளிலுள்ள தமிழ் மக்களால் எமக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன.

அதற்கு அமைவாக நான் மாகாணசபையில் இந்த விடயம் தொடர்பிலும் பேசியிருந்தேன். அதனடிப்படையில் இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக மாகாணசபையினால் ஓர் குழு அமைக்கப்பட்டது. அவ்வாறு மாகாணசபையினால் அமைக்கப்பட்ட குழுவினர், இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தினைச் சார்ந்தோரைப் பலதடவைகள் சந்திததுக் கலந்துரையாடியுமிருந்தனர்.

குறிப்பாக கடந்த 2018.06.01 அன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும், திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டைப் பகுதியில் அமைந்துள்ள கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்திற்குரிய, இல்மனைட் தொழிற்சாலையிலும் கடந்த 2018.09.01 அன்றும் இவ்வாறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

அப்போதுகூடநாம் இந்த இடத்தை அபகரிக்கும் விடயத்திற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை.

இவை மக்களுடைய காணிகள். எனவே, மக்களுக்கே வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் நாம் கருத்துக்களைத் தெரிவித்துவந்த நிலையில் அவர்களுடைய இந்த ஆக்கிரமிப்பு மற்றும், கனியமணல் அகழும் முன்னெடுப்புக்கள் கிடப்பில் போடப்பட்டிருந்தன.

இந்நிலையில் கடந்த 2018.10.24 அன்று வடமாகாணசபையின் முதலாவது ஆட்சிக்காலம் நிறைவிற்கு வந்த பின்னர், இது தொடர்பான கூட்டங்களுக்கு வடமாகாணசபையால் அமைக்கப்பட்ட குழுவினை அழைப்பதுமில்லை. இந்த நடவடிக்கைகள் தொடர்பில் அந்தக் குழுவினருடன் கலந்துரையாடுவதுமில்லை.

இவ்வாறானதொரு சூழலில் இதுவரை காலமும் கிடப்பில் போடப்பட்டிருந்த இந்த கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்திற்குரிய இல்மனைட் தொழிற்சாலை அமைப்பதற்கான காணி அபகரிப்பு விடயம் மற்றும் கனியமணல் அகழ்விற்கான செயற்பாடுகள் என்பன தற்போது மீண்டும் முனைப்புப்பெறத் தொடங்கியுள்ளன.

அந்தவகையில் இல்மனைட் தொழிற்சாலை அமைப்பதற்கென 18 தமிழ் மக்களுக்குச் சொந்தமான, 44 ஏக்கர் அறுதி உறுதிக்காணிகளை கொக்கிளாய் கிழக்குப் பகுதியில், காணிகளுக்குரிய தமிழ் மக்களின் அனுமதியைப் பெறாது கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் வேலிகளை அமைந்து அபகரித்து தமது அடாவடித் தனமான செயற்பாட்டினைச் செய்துள்ளனர். கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தின் இத்தகைய நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்தோடு அண்மையில் கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக் கேணி, கொக்குத் தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத் தொடுவாய் தெற்கு ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலுமுள்ள பொது அமைப்புகள், பொதுமக்கள் எனப் பலரும் கையொப்பமிட்டு, இந்தக் காணி அபகரிப்பைத் தாம் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும், இந்தக் காணிகள் எமது தமிழ் மக்களுக்கே சேரவேண்டும் என்பதான மகஜர் ஒன்றினை முல்லைத்தீவு மாவட்ட செயலாளரிடம் வழங்கியதுடன், இன்னும் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கும் அந்த மகஜரின் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டதுடன், என்னிடமும் அந்த மகஜரின் பிரதியினை அப்பகுதி மக்கள் கையளித்திருந்தனர்.

இவ்வாறாக அந்தப் பகுதி மக்கள் பெரும்பாலானோர், அப்பகுதியில் அபகரிக்கப்பட்டுள்ள இந்தக் காணிகள், காணிகளுக்குரிய மக்களுக்கே வழங்கப்படவேண்டுமென கோரியிருக்கின்றனர்.

இந்நிலையில், தமிழ் மக்களுக்குரிய இந்த உறுதிக்காணிகளை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் எவ்வாறு ஆக்கிரமிக்கமுடியும்?

இவ்வாறு மக்களுக்குரிய காணிகளை அனுமதியின்றி அரச திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும் அபகரிப்பது பொருத்தமான செயற்பாடல்ல. எனவே, கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் தாம் அபகரித்துள்ள இந்தக் காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

அவ்வாறாக இந்தக் காணிகளை விடுவித்து மக்களுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை, உரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் முன்னெடுக்கவேண்டும் - என்றார்.

## பயங்கரவாத...

கலந்துகொண்டபோது, வாய்மூலமான வினாக்களுக்கான விடை நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் சபையில் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

விளையாட்டுத்துறை அமைச்சர் முக்கியமானதொரு விடயத்தை பற்றி பேசியுள்ளார். இதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அரசாங்கம் என்ற வகையில் சட்டத்தின்படியே, ஒருவருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கையெடுக்க வேண்டும். அதற்கு அமைய விடுதலைப்புலிகள் என்ற பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவகைப்பட்டும் அதன் பின்னர் தண்டனை வழங்கப்பட்டிருந்தாலும் அதற்கு முன்னர் அவர்கள் நீண்டகாலமாக தண்டனையை அனுபவித்துள்ளனர்.

இவ்வாறானவர்களை அடையாளம் கண்டு அவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். ஆகவே, இது தொடர்பாக இன, மத பேதமின்றி அனைவரும் இலங்கையர் என்ற வகையில் ஆராய்ந்து தீர்வொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அரசியல், பழிவாங்கலை மறந்து அனைவரும் இணைந்து ஒரு திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். நிலுவையிலுள்ள இவ்வாறான வழக்குகளை விரைவில் விசாரணை செய்து நிறைவுசெய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றோம். அதேபோன்று, வழக்கு தொடரப்படாவிட்டால் அவர்கள் நீண்டகாலம் தடுத்து வைத்திருக்க முடியாது. ஒன்று வழக்கு தொடர வேண்டும். அல்லது அவரை விடுதலை செய்ய வேண்டும். இது அனைவருக்கும் பொருந்தும். அதற்கமையவே நாங்கள் பல செயற்பாடுகளை முன்னெடுப்போம்.

இதேவேளை, நீண்ட காலத்திற்கு முன்னர் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தில் சில சில திருத்தங்கள் முன்னெடுக்க வேண்டும் என்பது குறித்து அமைச்சரவையில் பேசப்பட்டது. அதனால், இது குறித்து ஆராய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுத்துள்ளோம். அதன்படி, தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாத, நாட்டுக்கு பொருத்தமான, மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை ஆராய்ந்து மாற்றங்களை முன்னெடுப்போம் - என்றார்.

## ரிஷாட், ஷானி...

நேற்று இடம்பெற்ற சபை அமர்வில் கலந்துகொண்ட போது, வாய்மூலமான வினாக்களுக்கான விடை நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.இது குறித்து அவர் சபையில் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் பலர் வழக்குகளின்றி சிறையில் இருப்பதாகவும், பலர் நீண்டகாலமாக தடுத்துவைத்திருப்பதாகவும், அவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் சபையில் கூறினர்.

ஆனால், பல மாதங்களாக இருக்கும் ஷானி அபேசேகரவிற்கு என்ன செய்தனர்? பல மாதங்களாக இருக்கும் ரிஷாட் பதியுதீனுக்கு என்ன செய்தனர்? ஏன் இவ்வாறு செய்கின்றீர்கள்? இவ்வாறான நடவடிக்கைகளை செய்துகொண்டு நாட்டுக்கு உபதேசம் செய்யவருகின்றனர்.

அச்சம், வெட்கம் இருந்தால் முதலில் இவற்றை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றார்.

## பலவந்தமாக...

கலந்துகொண்டபோது, உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ள போதிலும், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாமல் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை ஏன் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் சட்ட விதிமுறைகளுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளாரே தவிர, பலவந்தமாக தடுத்து வைக்கப்படவில்லை. நீதிமன்ற அறிவிப்புகளுக்கு அமையவே அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பில் எம்மால் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது. இலங்கையில் சுயாதீன பொலிஸ், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சுயாதீனமான நீதித்துறை காணப்படுகின்றன. நீதிமன்ற செயற்பாடுகள் தொடர்பான தீர்மானங்கள் நீதிமன்றத்தினாலேயே எடுக்கப்படும் - என்றார்.

## யாழில் குழந்தைகளை...

கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று முன்தினம் (ஜூன்-21) இரவு 388 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இவ்வாறு 14 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக ஆய்வுகூடத்தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலின் அடிப்படையில்

யாழ். மாவட்டத்தில் - 14 பேருக்கு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் - 04 பேர் (34, 37, 41 மற்றும் 45 வயதுடைய ஆண்கள்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் - 04 பேர் (பிறந்து 49 நாட்களேயான பச்சிளம் குழந்தை, 12 வயது சிறுமி, 35 மற்றும் 70 வயதுடைய பெண்கள்)

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் - 02 பேர் (6 மாதம் மற்றும் 3 வயதுடைய பெண் குழந்தைகள்)

சங்கானை பிரதேச வைத்தியசாலையில் - ஒருவர் (15 வயது சிறுவன்), பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் - ஒருவர் (43 வயதுடைய ஆண்), மன்னார் மாவட்டத்தில் - ஒருவர், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் - ஒருவர் (28 வயதுடைய ஆண்)

## இன்று எம்.பி...

தேசியப் பட்டியல் ஆசனத்தை பிரதிநிதித்துவப்படுத்தியே அவர் இன்று நாடாளுமன்றம் நுழைகின்றார்.

தங்களுக்கு கிடைக்கப்பெற்ற தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு யாரைத் தெரிவு செய்துவது என்பது தெரியாமல், ஒன்றரை வருடங்களுக்கு மேலாக தடுமாறிய ஐக்கிய தேசியக் கட்சி இம்மாத ஆரம்பத்தில் இடம்பெற்ற செயற்குழுவில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையே தெரிவுசெய்தது.

அதற்கமைய, அவருடைய பெயர் தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டதையடுத்தே, ரணில் விக்கிரமசிங்க இன்று நாடாளுமன்றத்திற்கு வருகை தருகின்றார்.

இதனையடுத்து, சபை அமர்வுகள் ஆரம்பித்தவுடன், நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவுள்ளார்.

43 வருடங்களுக்கு மேலாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த ரணில் விக்கிரமசிங்க, தேர்லில் தோல்வியடைந்து தேசியப்பட்டியலினூடாக மீண்டும் நாடாளுமன்றம் வருவதும் குறிப்பிடத்தக்கது.

## பொதுவான பிரச்சினைகளில்...

இடையிலான இருதரப்பு உறவை மேம்படுத்துவதற்கு இரு நாடுகளும் இதுவரை முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் பலனளித்திருப்பதாக இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

தொற்றுநோயை எதிர்கொள்வதற்காக இந்திய அரசாங்கம் நல்கிய நிதியுதவி மற்றும் கொவிட் நிவாரண உதவிகளுக்காக இந்திய வெளியுறவு அமைச்சருக்கு குணவர்தன நன்றிகளைத் தெரிவித்தார்.

பிராந்திய அமைப்புக்களான பிம்ஸ்டெக் மற்றும் ஐயோரா ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றுவதற்கு இரு அமைச்சர்களும் இந்தக் கலந்துரையாடலின்போது ஒப்புக்கொண்டனர். குறிப்பாக கொழும்புத் திட்டம் போன்ற பொதுவான தளங்களில் இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற கருத்துக்களும் இதன்போது பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இரு நாடுகளும் சந்திக்கும் கொவிட் தொற்றுநோய் சார்ந்த அபாயம் குறித்து இரு அமைச்சர்களும் விரிவாகக் கலந்துரையாடியதுடன், தற்போதைய நிலைமையை விரைவாக இயல்புநிலைக்குக் கொண்டுவருவதற்கான அனைத்து பலமும் இந்தியாவுக்கு இருக்கும் என அமைச்சர் குணவர்தன இந்திய வெளியுறவு அமைச்சருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

ஏறக்குறைய அரை மணிநேரம் நீடித்த இந்த உரையாடலின் போது, இரு நாடுகளுக்குமிடையிலான பரஸ்பர ஆர்வத்தின் பல முக்கியமான விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன- என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எக்ஸ்பிரஸ் பேர்ள்...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சபையில் நேற்று (22) தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று இடம்பெற்ற சபை அமர்வில் கலந்துகொண்ட போது, வாய் மூலமான வினாக்களுக்கான விடை நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் சபையில் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் கடற்றொழில் பாதிக்கப்பட்டது உண்மைதான். எனினும், தற்போது அவர்கள் தங்களுடைய தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, தற்போது மீன்களை உண்ணக் கூடாது என மக்கள் மத்தியில் தவறான பிரசாரங்கள் முன்னெடுத்துவருகின்றன. ஆனால், மீன்களை உண்ணலாம். அதில் எவ்வித பாதிப்பும் இல்லை.

இந்த நிலையில், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனத்திடமிருந்து குறிப்பிட்ட தொகையை முதல் கட்ட நஷ்டஈடாக பெற்றுக்கொள்ளவுள்ளோம். அந்த தொகையானது 10 நாட்கள் அல்லது இரு வாரங்களுக்குள் கிடைக்கப்பெறும் என நினைக்கின்றோம். அவ்வாறு கிடைத்தவுடன் கடற்றொழிலாளர்களுக்கு நஷ்டஈடாக கொடுக்கவுள்ளோம்.

இது தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திவருகின்றன. அதன் பின்னர் மக்களுக்கு இது தொடர்பான வேலைத்திட்டங்கள் அறிவிக்கப்படும் - என்றார்.

## இன்றிரவு மீண்டும்...

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் வகையில் மே 21 அரசாங்கம் விதித்த கட்டுப்பாடுகள் ஜூன் 21 ஆம் திகதி அதிகாலை 4.00 மணிக்குத் தளர்த்தப்பட்டது.

இந்த தளர்வு தொடர்ந்து மூன்று நாட்கள் நீடிக்கப்பட்டு, மீண்டும் இன்று 23ஆம் திகதி இரவு பயணக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த மூன்று நாட்கள் பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருந்தாலும், மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்படவில்லை.

எதிர்வரும் பொசன் விழாவின் காரணமாக மக்கள் கூடுவதைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி கூறினார்.

## அரசியல் கைதிகளை...

தவறுகளினால் பிணை பெற்றுக்கொள்ள முடியாத, வழக்குகளை நிறைவு செய்ய முடியாத பல இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தில் பல வருடங்களாக இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். நல்லாட்சியின் போது, நான் உள்ளிட்ட பல அமைச்சர்கள் சிறையில் அடைக்கப்பட்டோம். அதன்போது, சிறைச்சாலையில் பல படிப்பினைகளை பெற்றுக்கொண்டோம்.

தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் பலர் இன்றும் சிறைகளில் உள்ளனர். வழக்கு விசாரணைகளின் பின் 35 பேரே தண்டனை பெற்று தொடர்ந்தும் சிறையில் இருப்பதோடு அவர்கள் பெற்ற தண்டனைக் காலத்திற்கும் மேலதிகமாகவே தண்டனை கிடைக்கும் முன்னர் சிறையில் கழித்துவிட்டனர். அத்தோடு, நீண்ட காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டு மேல் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட 38 வழக்குகள் இருக்கின்றன.

அத்தோடு, 20 வருடங்களுக்கும் மேலதிகமாக சிலர் தடுப்பில உள்ளனர். எந்த வழக்கும் தொடரப்படாத நிலையில் 13 பேர் உள்ளனர். வழக்கு விசாரணை நிறைவுபெற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாத 116 பேர் உள்ளனர். இவ்வாறு பல இளைஞர்கள் சிறைகளில் உள்ளனர். இவர்கள் மீதான வழக்கு விசாரணை நிறைவு செய்ய வேண்டும். அல்லது விடுவிக்கப்பட வேண்டும்.

கடந்த மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் 12 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டதோடு, 3 ஆயிரத்து 500 பேர் சிவில் பாதுகாப்புப் பிரிவில் தொழில் வாய்ப்பும் பெற்றுள்ளனர்.

நான் சிறைச்சாலையில் இருந்த சந்தர்ப்பத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்பட்டிருந்த பலரை சந்தித்தேன். அவர்கள் சிறை வைக்கப்பட்டிருக்கின்ற காலம் எனது வயதை விடவும் அதிகம். இன்று வரையும் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு முடியாமலிருக்கின்றது. அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் அல்லது புனர்வாழ்வுக்கு அவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

சிறைச்சாலையில் நான் சந்தித்த ஒருவருடைய கதை ஒன்றை இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன். குறிப்பிட்ட பிரபலம் ஒருவரது படுகொலை வழக்கில் அவர் சிறை வைக்கப்பட்டுள்ளார். குறித்த கைதி, மரமொன்றில் கிளையை வெட்டியதே, அவர் செய்த குற்றம். கிளையை வெட்டியவர் சிறையில். ஆனால், பிரதான குற்றவாளி மன்னிப்புப் பெற்று வெளியே சுதந்திரமாக உள்ளார்.

அதனால், 12 ஆயிரத்து 500 முன்னாள் போராளிகளை புனர்வாழ்வுக்குட்படுத்தி விடுதலை செய்தமை மற்றும் 3 ஆயிரத்து 500 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க எம்மால் முடியும் என்றால், இந்த விடயத்திலும் கவனம் செலுத்த வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களம் அல்லது புனர்வாழ்வுத்திட்டத்தின் ஊடாக இவர்களுக்கு நீதியை வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். இதுவொரு மன உளைச்சல் பிரச்சினையாகும். எமது அரசாங்கம் எவருக்கும் அநீதியை செய்யாது என்பதையும் குறிப்பிடுகின்றேன் - என்றார்.

## காணாமல்போனவர்கள்...

இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் என கருதப்படுபவை குறித்தும், தமிழர்கள் துன்புறுத்தப்படுவது குறித்தும் நான் கரிசனை கொண்டுள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் சூழமைவில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவது குறித்தும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காணாமல்போனவர்கள் இழப்பீட்டு அலுவலகங்களுக்கான சமீபத்தைய நியமனங்கள் குறித்து நான் கரிசனை கொண்டுள்ளேன், கடந்தகால குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதை ஊக்குவிக்காத நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கைகளை மேலும் பாதிக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய பயங்கரவாத எதிர்ப்பு விதிமுறைகள் குறித்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் தனது கரிசனத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த விதிமுறைகள் பயங்கரவாதத்திற்கு ஆதரவளித்த குற்றச்சாட்டின் கீழ் 300 முஸ்லிம்கள் தமிழர்களை தடுத்துவைக்க உதவியுள்ளன. இவை நல்லிணக்கத்தை முன்னெடுக்க உதவப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதமயப்படுத்தப்பட்டவர்களை அதிலிருந்து விடுவிக்கப்பதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் இன்றி இரண்டு வருடம் தடுத்து வைப்பதற்கு இந்த விதிமுறைகள் வழிவகுக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

'பொலிஸ் என்கவுண்டர்ஸ்' என்ற சூழமைவில் பொலிஸாரினால் தடுத்துவைக்கப்பட்டுள்ளவேளை நிகழ்கின்ற உயிரிழப்புகள் தொடர்வது குறித்து தான் சுட்டிக்காட்ட விரும்புதாகவும் மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## ஆணையாளரின்...

வேண்டிய உரிய நடவடிக்கைகளையும் எடுப்பதாக அமைச்சரவை இணைபேச்சாளரும் அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது, இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை விடயங்களில் மனித உரிமை சட்டத்திற்கு அமைய இலங்கை மீது நடவடிக்கையெடுப்பது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பாக பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது, தேவையான தகவல்களை வழங்கியுள்ளோம். நிரூபிக்கக் கூடிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் நாங்கள் சாட்சியங்களை முன்வைத்துள்ளோம்.

பொறுப்புக்கூற வேண்டிய விடயங்கள் மற்றும் சாட்சியங்கள் அடிப்படையாக் கொள்ளவில்லை என்பதே எங்களுடைய நிலைப்பாடாகும். இதனை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்போம். இது தொடர்பாக நாங்கள் கவனம் செலுத்திவருவதோடு, வெளிவிவகார அமைச்சும் இது குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துவருகிறது – என்றார்.

## பேஸ்புக் பதிவுகளுக்காக...

அளவுக்கு பாரிய தவறுகளை அவர்கள் இழைக்கவில்லை எனவும் சாணக்கியன் தெரிவித்தார்.

பேஸ்புக் மூலம் அரசியல் கட்சியை உருவாக்க முயன்றதற்காக பிரதீபன் என்ற இளைஞன் நேற்றும் கைது செய்யப்பட்டார். அரசியல் கட்சி உருவாக்க முயன்றதற்காக அவர் குற்றவாளியாக்கப்பட்டுள்ளார்.

கடுமையான குற்றங்களைச் செய்த பின்னரும் பிள்ளையான் இதே அரசால் விடுவிக்கப்பட்டார். ஆனால் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்ததாக பல அப்பாவி இளைஞர்கள் நீண்ட காலம் சிறைகளில் இருக்கிறார்கள் எனவும் சாணக்கியன் சுட்டிக்காட்டினார்.

இந்த விவகாரம் குறித்தும் ஏற்கனவே பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும் சாணக்கியன் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இவ்வாறான கைதிகளை ஒரு பொறிமுறையின் கீழ் விடுவிக்க அரசாங்கம் முயற்சி செய்கிறது. அதனை சீர்குலைக்க சாணக்கியன் முயல்வதாகக் குற்றஞ்சாட்டினார்.

சிலர் 30 வருடங்களுக்கு மேலாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் நேற்று கைதுசெய்யப்பட்டவர்கள் குறித்து மட்டும் ஏன் பேசுகிறீர்கள் எனவும் சாணக்கியனைப் பார்த்து நாமல் கேள்வி எழுப்பினார்.

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் - காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களை கோப் குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு



ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட சில நிறுவனங்களை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) முன்னிலையில் அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அக்குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கோப் குழு உறுப்பினர்களின் விசேட கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது. கொவிட் தொற்றுநோய் சூழலில் திட்டமிட்டபடி கூட்டங்களை நடத்தமுடியாமல் உள்ளமை மற்றும் எதிர்வரும் காலத்தில் கூட்டங்களை நடத்திச்செல்லும்முறை தொடர்பில் தீர்மானிப்பதற்காக இக்கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

இதற்கமைய எதிர்வரும் ஜூலை 06ஆம் திகதி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தையும் ஜூலை 07ஆம் திகதி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்களையும் கோப் குழு முன்னிலையில் அழைப்பதற்கும் இக்குழுவின் உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

இதன்போது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கீழ் உள்ள லிட்ரோ காஸ் லங்கா நிறுவனம் மற்றும் லிட்ரோ காஸ் டேர்மினல் லங்கா நிறுவனம் ஆகியவற்றின் தற்போதைய நிலைமைகள் குறித்து விசாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக ஜூலை 08ஆம் திகதிமுதல் கடந்த காலத்தில் அழைக்க முடியாமல்போன நிறுவனங்களை மீண்டும் அழைப்பதற்கு கோப் குழுவின் உறுப்பினர்கள் இதன்போது இணக்கம் தெரிவித்தனர்.

நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்காக பிரேரிக்கப்பட்டுள்ள மஹாபொல அறக்கட்டளை நிதியத்தின்கீழ் இயங்கும் மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதியம் தொடர்பிலும் கோப் குழு கவனம் செலுத்தியது.

இதற்கு மேலதிகமாக தற்பொழுது நிலவும் கொவிட் தொற்றுநோய் சூழலுக்கு மத்தியில் சுகாதார பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கமைய கோப் குழுவின் அமர்வுகளை எவ்வாறு முன்னெடுத்துச்செல்வது என்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதற்கமைய எதிர்காலத்தில் கோப் குழுவின் விசாரணைகளுக்கு அரச நிறுவனங்களை அழைக்கும்போது அந்நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் கணக்காளர் ஆகியோருடன் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரை மாத்திரம் குழுவின் முன்னிலையில் அழைப்பது மற்றும் ஏனையவர்களை ஒன்லைன் முறைமையின்கீழ் இணைத்துக்கொள்வது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்படவுள்ளது.

இன்றைய கூட்டத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான சரத் வீரசேகர, சுசில் பிரேமஜயந்த, இந்திக அனுருத்த, டி.வி.சானக மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ஜகத் புஷ்பகுமார, அனுர திஸாநாயக்க, எரான் விக்ரமரட்ன, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, நளின் பண்டார, எஸ்.எம்.மரிக்கார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# வவுனியா - சூசைப்பிள்ளையார்குளம் பகுதியில் எழுமாறாக 55 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை

## 07 நபர்களுக்கு தொற்று உறுதி



(வவுனியா நிருபர்)

கொரோனா தீவிரமடைந்துள்ளதையடுத்து வவுனியா - சூசைப்பிள்ளையார்குளம் மற்றும் சகாயமாதாபுரம் பகுதியில் சுகாதாரப் பிரிவினரால் நேற்றுக் காலையிலிருந்து மதியம்வரை எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா சகாயமாதாபுரம் வைரவர் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கொரோனா தாக்கம் காரணமாக மரணமடைந்துள்ளதுடன் 07 பேர் தொற்றுடன் நேற்று இனங்காணப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து அப்பகுதியில் அதிகரித்துவரும் கொவிட் பரம்பலை கட்டுப்படுத்தும் முகமாக சூசைப்பிள்ளையார்குளம் மற்றும் சகாயமாதாபுரம் பகுதியில் வைத்தியர் பிரசன்னா தலைமையிலான சுகாதாரப் பிரிவினரால் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா தாக்கம் காரணமாக சகாயமாதாபுரம் மற்றும் வைரவகோவிலடிப் பகுதிகளில் முற்றாக பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பகுதியில் வீதியில் நின்றோர் மற்றும் வீடுகளில் இருந்தோர் என 55 பேருக்கு இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன் முடிவுகளையடுத்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# கொரோனா தொற்று அதிகரிப்பு தொடர்பில் திணைக்களங்களுடன் அவசர கலந்துரையாடல்

## பல்வேறு தீர்மானங்களும் முன்வைப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், அதற்கான காரணங்களை ஆராய்வதற்காகவும் எவ்வாறு மாவட்டத்தில் கொரோனா தொற்றை தடுக்க கொரோனா தொற்று இல்லாத மாவட்டமாக மாற்ற முடியும் என்பது தொடர்பாகவும் ஆராயும் அவசா கலந்துரையாடல் நேற்றுக் காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், சுகாதாரத்துறையினர், பொலிஸ், இராணுவ அதிகாரிகள், அழைக்கப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை தொடர்பாக ஆராயப்பட்டது. மேலும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள், வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்தவர்கள் குறிப்பாக, வெளி மாவட்டங்களில் ஆடைத்தொழிற்சாலையில் கடமையாற்றுகின்றவர்களிடமும் குறித்த தொற்று காணப்பட்டமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக குறித்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த நடவடிக்கைகளுக்கான மாற்று நடவடிக்கைகள் மேற்கொள் வதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப் பட்டதோடு, நாட்டில் பயணத்தடை நீக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் நடமாடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


எனினும், மக்கள் அதிகமாக ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், மாவட்டத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பற்றாக்குறை காணப்படுகின்ற நிலையில்,அவர்களை பயன்படுத்தி மக்கள் ஒன்றுகூடுவதை தடுப்பதிலுள்ள பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் இளைஞர்களைக்கொண்ட குழுவொன்றை அமைத்து, அவர்களுக்கான பாதுகாப்பு உடைகளை வழங்கி அவர்கள் மூலம் மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் செயற்பாட்டை மேற்கொள்ள ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த செயற்பாட்டை உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவருவது குறித்தும் ஆராயப்பட்டதோடு, குறித்த செயற்பாட்டிற்கு விரும்பிய கட்டுக்கோப்புடன் சுகாதார நடை முறைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லக்கூடிய இளைஞர், யுவதிகளை தன்னார்வத் தொண்டர்களாக இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா தொற்றுக்குள்ளான சிங்கம் பூரண குணமடைந்தது



கொரோனா தொற்றுக்குள்ளான தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் இருந்த சிங்கம் பூரண குணமடைந்துள்ளதாக அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தடுப்பூசிகள் மிருகக்காட்சிச் சாலையிலுள்ள மிருகங்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு தென்கொரியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தோர் எனும் 11 வயது சிங்கமே இவ்வாறு தொற்றுக்குள்ளாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திம்புள்ள – பத்தனை பொலிஸ் நிலைய அதிகாரிகள் நால்வருக்கு கொரோனா

**திம்புள்ள - பத்தனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 4 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.**

**அதன்படி, குறித்த பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பில் இருந்த 10 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.**

**இதற்கு முன்னதாக குறித்த பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதகர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.**

# இறந்த மகளின் பூதவுடலை எங்களிடம் தாருங்கள்; பெண்ணின் தாயார் கண்ணீர் மல்க வேண்டுகோள்

## குடும்பத்தினர் காரைதீவில் ஆர்ப்பாட்டம்



(நூருள் ஹுதா உமர்)

காரைதீவில் கடந்த வெள்ளிக்கிழமை (18ஆம் திகதி) தற்கொலைசெய்து மரணித்த சுகுமார் டினோகாவின் (வயது 17) பூதவுடலை குடும்பத்தாரிடம் கையளிக்க அரசும் நீதித்துறையும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பட்டமொன்றை மரணித்த சுகுமார் டினோகாவின் குடும்பத்தினர் மற்றும் உறவுகள் நேற்று மாலை இறந்தவரின் வீட்டுக்கு முன்னால் மேற்கொண்டனர்.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிறில், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சசிகுமார் உட்பட பலரும் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது அரசாங்கம் முன்வைத்துள்ள மரண சட்டதிட்டங்கள் மீறப்பட்டு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவித்தல்கள் புறக்கணிக்கப்பட்டு, இந்தப் பூதவுடல் குடும்பத்தாரிடம் ஒப்படைக்காமல் தொடர்ந்தும் இழுபறிநிலையில் உள்ளதாகவும் இதன்மூலம் தமது சமயச் சடங்குகள் எதுவும் செய்யமுடியாதுள்ளதாகவும் வருத்தம் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த இறந்தவரின் தாயார், தனது மகளை நல்லடக்கம் செய்ய பூதவுடலை கையளிக்குமாறும் அதன்பின்னர் விசாரணைகளை நடத்துமாறும் இதுதொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஒப்பாரியுடன் கண்ணீர் மல்க கேட்டுக்கொண்டனர்.

தற்கொலை செய்து இறந்த சுகுமார் டினேகாவின் பூதவுடல் மரண விசாரணைகளுக்காக அம்பாறை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் நடமாடும் சேவை மூலம் நீர்க்கட்டணம் செலுத்தும் வாய்ப்பு

ජාතික ජලසම්පාදන හා ජලාපවහන මණ්ඩලය
National Water Supply & Drainage Board

(நற்பிட்டிமுனை நிருபர்)

கொரோனா தாக்கத்தை கருத்திற்கொண்டு கல்முனை பிராந்தியத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அலுவலகத்தால் நீர்க்கட்டணத்தை நடமாடும் சேவையினரிடம் செலுத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வீதி வீதியாக வலம்வரும் அலுவலக வாகனத்திலுள்ள உத்தியோகத்தர்களிடம் மக்கள் கட்டணங்களை செலுத்தி வருகின்றனர்.

பயணத்தடை காரணமாக கட்டணங்களை செலுத்தாதோர் இந்த நடமாடும் சேவை மூலம் நன்மை பெற்று வருகின்றனர்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் இத்திட்டத்திற்கு மக்கள் நல்லாதரவை வழங்கிவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# கொரோனா பரவல் தொடர்பான விவரங்களை மூடிமறைக்க அரசாங்கம் பல்வேறு தந்திரங்களை கையாள்கிறது

## ஹேஷா விதானகே எம்.பி. குற்றச்சாட்டு

கொரோனா பரவல் வேகமாக பரவி வருகின்ற நிலையில் அவ்வாறான பரவல் நடக்கவில்லை என்பதை நாட்டு மக்களுக்கு காட்ட அரசாங்கம் பல்வேறு தந்திரங்களை பயன்படுத்துவதாக இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய பெற்றோலியத்துறை அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவரும் ஒரு சிறப்பு நாள் இன்றாகும். தற்போது சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு நாட்டுமக்களை நேசிக்கும் குழுவையும் நேசிக்காத குழுவையும் நாட்டுமக்களால் அறிந்து கொள்ளலாம். அடையாளம் காணலாம். நாம் ஒரு கட்சியாக மக்களுக்காக முன்நிற்கிறோம்.

கொரோனா பரவல் இன்று வேகமாக பரவுகிறது. அவ்வாறான பரவல் நடக்கவில்லை என்பதை நாட்டுமக்களுக்கு காட்ட அரசாங்கம் பல்வேறு தந்திரங்களை பயன்படுத்துகிறது. கொவிட் நோயாளிகளின் தரவுகளைப் பற்றி ஊடகங்களில் தவறான தகவல்களைக் கொடுத்திருப்பதை பற்றி ஜனாதிபதி கூறியதை நாங்கள் கண்டோம். இதனால் சுதத் சமரவீர தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டியிருந்தது. அரசியல்வாதிகள் தேவையான முடிவுகளுக்குகேற்ப அரச சேவையாளர்கள் கடமையாற்றும் ஒரு துர்ப்பாக்கிய சூழல் இன்று ஏற்பட்டுள்ளது. அந்தநேரத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்க காலத்தையும் விட அதிகாரிகளை அரசியல் ரீதியாக சங்கடங்களை ஏற்படுத்தும் நிலை இன்றைய ஆட்சியில் தலைதூக்கியுள்ளது. உள்ளக இரு முகாம்களால் ஆளுந்தரப்பு அரசாங்கம் அதிக அழுத்தத்தில் உள்ளது. அந்த அழுத்தத்தை மக்களிடம் காட்ட வேண்டாம்.

தற்போது நாட்டில் பல பிரச்சினைகள் உள்ளன. அரசாங்கம் அதை அடக்கி மற்ற விடயங்களைக் கொண்டுவந்துள்ளது. அரசாங்கம் மீது மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். நாட்டில் பசளைகள் இல்லை. இதனால் விவசாயிகள் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு போராட்டங்களை சுகாதார விதிமுறைகளுடன் நடத்தினோம். அரசாங்கம் விவசாயிகளை கல்லறைக்கு அழைத்துச்செல்கிறது. நேற்றைய எமது



கட்சி நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் இது குறித்து நாங்கள் நீண்ட விவாதம் மேற்கொண்டோம். நேற்று நடைபெற்ற குழு கூட்டத்தில் எங்கள் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஒரு முடிவை எடுத்தார். விவசாய சமூகத்தை தூரமாக்காமல் அவர்களுக்கு உதவும் பொருட்டு அவர்களின் பிரச்சினைகளை செவிமடுத்து வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க கட்சியின் ஆறு உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு ஒரு திட்டத்தை வகுக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

சஜித் பிரேமதாச நாடு முழுவதும் விவசாய சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துமாறு அவர்களுக்கு அறிவுறுத்தினார். இதற்காக அவருக்கு நாங்கள் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களிடம் விவசாயிகளின் குரலை கொண்டுசென்று ஓர் ஆக்கபூர்வமான தலையீட்டை ஏற்படுத்தி தீர்வுகாண விளைவோம். மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நாங்கள் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தும் இடத்திற்கு அரசாங்கத்தின் கண்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுப்போம்.

விவசாயிகள் அரசாங்கத்தைப் பாதுகாத்த வரலாறு ஒன்றுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ அதை மறந்துவிட்டார். ராஜபக்ஷக்கள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. நல்லாட்சியில் விவசாயிகள் செழிப்படைந்ததை நாம் காணலாம். நெல் அறுவடையில் தன்னிறைவு ஏற்பட்டது. இந்தத் திட்டத்தின் உண்மையான நோக்கத்தைப் புரிந்துகொள்ள விவசாய சமூகத்திற்கு அழுத்தம் கொடுக்கவேண்டிய நேரம் இது என்று நாடு கருதுகிறது.

இந்தத் திட்டத்தின் உண்மையான நோக்கத்தை நாட்டின் மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். நாட்டைக் காக்கும் விவசாயிகள் குழு ஒன்று உள்ளதென்பது ஒரு பெரிய பொய். இந்த பாதுகாப்பு வலயம்தான் இன்று உடைக்கப்பட்டது. அதன் சில நோக்கங்களை நாங்கள் காண்கிறோம். நாட்டில் டொலர்கள் பற்றாக்குறை உள்ளது.

அதையும் மீறி ஏதோ இருக்கிறது. இப்போது அரிசி இறக்குமதிசெய்ய அனுமதி பெற முடிந்துள்ளது. இதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. உரம் தடை செய்யப்பட்டு ஒரு மாதத்திற்குள் நாங்கள் அரிசி இறக்குமதி செய்கிறோம். உண்மையில் உரங்கள் தடை செய்யப்பட்டமை அரிசி இறக்குமதிக்கா என்ற சந்தேகம் எழுகிறது. பொன்னி சம்பா ஒரு இலட்சம் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆட்சியாளர்களுக்கு இதுதான் உண்மையான நோக்கம். சீனி மோசடியில் ஈடுபட்ட வில்மா நிறுவனத்திற்கே அரிசி இறக்குமதிக்கான அனுமதியையும் வழங்குவார்கள். நாட்டுமக்களைப் பாதுகாக்கவே ஒரு உரத் தடை இருந்தால் நீங்கள் கூறும் மாற்றீடான உரங்களை இறக்குமதி செய்யலாமல்லவா என்று கேட்கிறோம். அதைவிடுத்து ஒரு மாதம் கடக்க முன்னரே அரிசி இறக்குமதி செய்கிறீர்கள்.நம் நாட்டின் தேயிலை ஏற்றுமதி குறைந்து வருவதாகவும் டொலர்களின் பற்றாக்குறை இருப்பதாகவும் அரசாங்கம் கூறுகிறது என்று தெரிவித்தார்.

இலங்கையில் காணாமல் போனவர்கள் இழப்பீட்டு அலுவலகத்திற்கான சமீபத்தைய நியமனங்கள் குறித்தும், நாட்டின் சமீபத்தைய பயங்கரவாத தடைச்சட்ட விதிமுறைகள் குறித்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் மிச்செலே பச்செலெட் கரிசனை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 47ஆவது அமர்வின் ஆரம்பத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இஸ்லாமியர்களை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் என கருதப்படுபவை குறித்தும், தமிழர்கள் துன்புறுத்தப்படுவது குறித்தும் தாம் கரிசனை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் சூழமைவில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவது குறித்தும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காணாமல்போனவர்கள் இழப்பீட்டு அலுவலகங்களுக்கான சமீபத்தைய நியமனங்கள் குறித்து நான் கரிசனை கொண்டுள்ளேன். கடந்தகால குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதை ஊக்குவிக்காத நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கைகளை மேலும் பாதிக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய பயங்கரவாத எதிர்ப்பு விதிமுறைகள் குறித்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் தனது கரிசனத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த விதிமுறைகள் பயங்கரவாதத்திற்கு ஆதரவளித்த குற்றச்சாட்டின் கீழ் 300 இஸ்லாமியர்கள் தமிழர்களை தடுத்துவைக்க உதவியுள்ளன. இவை நல்லிணக்கத்தை முன்னெடுக்க உதவப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதமயப்படுத்தப்பட்டவர்களை அதிலிருந்து விடுவிக்கப்பதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளின்றி இரு வருடங்கள் தடுத்து வைப்பதற்கு இந்த விதிமுறைகள் வழிவகுக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com/ thamilaneditor@gmail.com
2021, ஜுன் 23ஆம் திகதி, புதன்கிழமை

## ஐ.நா. ஆணையரின் கரிசனையை கவனிக்கவேண்டும் இலங்கை

பொலிஸ் என்கவுண்டர்ஸ் என்ற சூழமைவில் பொலிஸாரினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள வேளை நிகழ்கின்ற உயிரிழப்புகள் தொடர்வது குறித்து தான் சுட்டிக்காட்ட விரும்புதாக மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்த கரிசனையை இலங்கை அரசு தட்டிக்கழிக்க முடியாது. தட்டிக்கழித்துவிடவும் கூடாது. கொரோனா கால சூழ்நிலையில் உலகமே தத்தளித்துக் கொண்டிருந்தாலும், இலங்கையில் இனவாத செயற்பாடுகளில் கொஞ்சமும் குறைவைக் காணமுடியவில்லை.

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படுகின்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருகிறதே தவிர குறைந்தபாடில்லை.சமூக ஊடகங்களில் பதிவுகளை இட்டார்கள் அல்லது அரசியல்வாதிகளை விமர்சித்தார்களென கூறி பலர் கைதுசெய்யப்படும் நிலைமை தொடர்ந்தவண்ணமுள்ளது.

கருத்துச் சுதந்திரம் இருப்பதாகக் கூறும் அரசாங்கம், பகிரங்கமாக கருத்துக்களை வெளியிடுவோரைக் கைதுசெய்து தடுத்து வைப்பதில் நியாயமில்லை.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்குப் பின்னர் இஸ்லாமியர்கள் மீது கொண்டுள்ள சந்தேகப்பார்வை தீவிரமாகி இப்போது அவர்களை கண்டாலே தீவிரவாதிகளைப் பார்ப்பதுபோன்று நோக்கும் பரிதாப நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்தத் தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான், எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் சந்தித்த ஆட்களையெல்லாம் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்வதன் மூலம் எதனை சாதிக்க முடியுமென தெரியவில்லை.

அதேபோன்று, போருக்குப் பின்னர் இதுவரை உள்நாட்டுப்போரில் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர அவர்களின் உறவுகளுக்கு உரிய அனுமதியில்லை. ஒரே நாட்டின் பிரஜைகளுக்கு எதிராக நடந்த யுத்தத்தில் அந்தப் பிரஜைகள் தோற்கடிக்கப்பட்ட சமூகமாக மாற்றப்பட்டு, அந்த யுத்தத்தில் உயிரிழந்தவர்களை கூட நினைவுகூர அனுமதி மறுக்கப்படுமாயின் ஜனநாயகமும், சோஷலிசமும், சகவாழ்வும், நல்லிணக்கமும் புதையுண்டு போயுள்ளன என்பதைத்தானே காட்டுகின்றது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் விடுத்துள்ள இந்த எச்சரிக்கையை, பத்தோடு பதினொன்றாகக் கருதாமல், அதிலுள்ள விடயங்களை ஆராய்ந்து, தேவையான நடவடிக்கைகளை அரசு எடுப்பது அவசியம். உலகத்திற்கு எப்போதும் காரணங்களை சொல்லிக்கொண்டிருக்க இலங்கை முயலுமானால் ஒருநாள் உண்மையை எதிர்நோக்க வேண்டிவரும்.

# அமைச்சரவை தீர்மானங்கள்!

## 2021.06.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்




**01. உருகுணை பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் வேலூர் தொழில்நுட்ப நிறுவகத்திற்கும் (Vellore Institute of Technology, India) இடையேயான ஒப்பந்தம்**

ஆரம்ப பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சிகளுக்கான மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல், கற்பித்தல் ஆய்வுகள் மற்றும் பிரயோக ரீதியான பயிற்சிகள் தொடர்பாக பரஸ்பர அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்காக கல்விசார் ஊழியர்களின் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல், வெளியீடுகள் மற்றும் அறிக்கைகளைப் பரிமாறிக் கொள்ளல் உள்ளிட்ட ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றிணைந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றின் மூலம் கல்வி ஒத்துழைப்புக்களுக்காக உருகுணை பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் வேலூர் தொழில்நுட்ப நிறுவகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கை போக்குவரத்து சபையால் பயன்படுத்தப்பட்டு வரும் ஜா-எல, ஏக்கலவில் அமைந்துள்ள கறுவாத்தோட்ட காணியை விடுவிப்பு ஒப்புதல் பத்திரத்தின் மூலம் உரித்து வழங்கல்**

ஜா-எல பிரதேச செயலகப் பிரிவின், ஏக்கல கறுவாத்தோட்டப் பகுதியில் அமைந்துள்ள '23 ஏக்கர் 01 றூட் 16.5 பேர்ச்சர்ஸ் பரப்பளவு கொண்ட ஏக்கல தோட்டம்' எனும் பெயரில் காணப்படும் காணியின் பயன்பாடு, காணிக் கையகப்படுத்தல் சட்டத்தின் 44 ஆம் உறுப்புரையின் ஏற்பாட்டின் கீழ், 2017 ஆம் ஆண்டு இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்கப்பட்டிருந்தாலும், இதுவரை குறித்த காணி ஒப்புதல் பத்திரத்தின் மூலம் இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்கப்படவில்லை. குறித்த காணியின் ஒரு பகுதி 50 வருடங்களுக்கு மேலாக இலங்கை போக்குவரத்து சபையால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், தற்போது ஜா-எல போக்குவரத்து சபையின் களஞ்சியமும் அமைந்துள்ளது. மேலும், 17 ஏக்கர்களில், அரசாங்கத்திற்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் தனியார் கம்பனியில் பஸ் பெயர்ப்பலகைகளைத் தயாரித்தல் மற்றும் ஏனைய கருத்திட்டங்கள் இடம்பெறுகின்றன. அரச திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களின் வாகனங்கள் பழுதுபார்த்தல் மற்றும் திருத்தங்களுக்கான நிலையத்தை ஆரம்பித்து நடத்திச் செல்வதற்கு வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் தனியார் கம்பனி திட்டமிட்டுள்ளது. குறித்த கருத்திட்டம் உள்ளடங்கலாக இலங்கை போக்குவரத்து சபை மற்றும் வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் தனியார் கம்பனியின் முதலீட்டு நடவடிக்கைகளுக்காகவும் குறித்த காணியைப் பயன்படுத்தக் கூடியவாறு விடுவிப்பு ஒப்புதல் பத்திரத்தின் மூலம் இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்குவதற்கும், அரச – தனியார் பங்குடமை மூலம் முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. உள்ளூர் கைத்தொழில்களை பலப்படுத்துவதற்கும், ஊக்குவிப்பதற்குமான ஆலோசனைக் குழுவொன்றை அமைத்தல்**

நிரல் அமைச்சுக்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் துறையின் பிரதிநிதிகளுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பு இன்மை, கொள்கை வகுப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் செயன்முறையில் பிரச்சினைகளும், தேவையற்ற தாமதங்கள் ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. குறித்த தரப்பினருடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் நோக்கில் 1990 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கைத்தொழில் மேம்பாட்டு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கைத்தொழில்கள் தொடர்பான ஆலோசனைக் குழுவொன்றை அமைப்பதற்கான இயலுமை இருப்பினும், இதுவரை அதுதொடர்பான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. கைத்தொழில் துறையில் சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் சட்ட ஏற்பாடுகளை உள்வாங்கி, 1990 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கைத்தொழில் மேம்பாட்டு சட்டத்தை திருத்தம் செய்வதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறித்த திருத்தங்கள் உள்வாங்கப்படும் வரை, 20 பிரதான கைத்தொழில் துறைகளின் வர்த்தக சபை/சம்மேளனங்கள், பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் குறித்த கைத்தொழில்துறையின் நிபுணத்துவர்கள் அடங்கலாக ஆலோசனைச் சபையொன்றை நியமிப்பதற்கு கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. 1991 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் சட்டத்திற்கான திருத்தங்கள்**

தற்போது நடைமுறையிலுள்ள 1991 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் சட்டம் மற்றும் ஏற்புடைய திருத்தங்கள் மூலம், தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல்களுக்குத் தேவையான அதிகாரங்கள் மாத்திரம் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. குறித்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்தால் ஆரம்ப சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருப்பினும், சமகாலத் தேவைகளுக்கமைய குறித்த சட்டமூலம் மேலும் திருத்தப்பட வேண்டியமை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய தேவையான ஏற்பாடுகளை உள்வாங்கி 1991 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் சட்டம் (திருத்தப்பட்டது) திருத்தம் செய்வதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக தொழில்நுட்ப அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. 2003 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க பாவனையாளர் விவகாரங்கள் தொடர்பான அதிகாரசபைச் சட்டத்தை திருத்தம் செய்தல்**

பாவனையாளர் விவகாரங்கள் தொடர்பான அதிகாரசபைச் சட்டத்தை திருத்தத்திற்கான சட்ட மூலத்தைத் தயாரிப்பதற்காக 2018 செப்டெம்பர் மாதம் 03 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்தை மேலும் முறைமைப்படுத்த வேண்டிய தேவை உள்ளமையை சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். அதேபோல் சமகாலத் தேவைகளுக்கமைய குறித்த சட்டமூலத்திற்கு மேலும் உள்வாங்கப்பட வேண்டிய ஏற்பாடுகளை வர்த்தக அமைச்சு அடையாளம் கண்டுள்ளது. அதற்கமைய அடையாளம் காணப்பட்டுள்ள ஏற்பாடுகளையும் உள்வாங்கி, சட்டவரைஞர் குறித்த சட்டமூலத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. உர முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குபடுத்தல்களை முறைப்படுத்துவதற்காக தற்போது காணப்படும் சட்ட வரையறைகளை காலத்தோடு தழுவியதாக பலப்படுத்தல்**

உர உற்பத்தி, தயாரிப்பு, இறக்குமதி மற்றும் விநியோகம் போன்றவற்றை முறைமைப்படுத்துவதற்காகவும், அதற்கு ஏற்புடைய விடயங்கள் தொடர்பாகவும் சட்ட ஏற்பாடுகளை விதிக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டு 68 ஆம் இலக்க உர முறைமைப்படுத்தல் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த சட்டத்தின் சில ஏற்பாடுகள் சமகாலத் தேவைகளுக்குப் போதுமாக இன்மையாலும், பொருத்தமற்ற வகையில் இருப்பதாலும் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. குறிப்பாக நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு அரசாங்கக் கொள்கைப் பிரகடனத்திற்கமைய சேதனப் பசளைப் பயன்பாட்டை நாட்டில் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால், அது தொடர்பான ஏற்பாடுகளை சட்டத்தில் உள்வாங்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதனால் 1988 ஆம் ஆண்டு 68 ஆம் இலக்க உர முறைமைப்படுத்தல் சட்டத்திற்குப் பதிலாக சமகாலத் தேவைகளுக்கமைவான ஏற்பாடுகளை உள்வாங்கி புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் சட்டக்கோவையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் (முன்கூட்டிய வழக்கு விசாரணை ஏற்பாடுகள்)**

மேல் நீதிமன்றங்களில் முற்கூட்டிய வழக்கு விசாரணைகளை நடத்துதல் தொடர்பாக புதிய ஏற்பாடுகளை அறிமுகம் செய்வதற்காக 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கக் குற்றவியல் சட்டக்கோவையில் திருத்தம் கொண்டு வருவதற்காக 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அங்கீகாரத்தின் பிரகாரம் சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. தேசிய எரிசக்தி தினம் பிரகடனப்படுத்தல்**

மின்சக்தி அமைச்சு, எரிசக்தி அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் சூரிய மின், காற்றாலை மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட அபிவிருத்திகள் இராஜாங்க அமைச்சும் இணைந்து நிலைபெறுதகு எரிசக்தி தொடர்பாக பாடசாலை மாணவர்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் ஆக்கத்திறன்களை மேம்படுத்தும் வகையில் பல்வேறு செயற்பாடுகளை உள்ளடக்கியதான தேசிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்குச் சமாந்தரமாக எஸ்.எலியோஸ் எனும் பெயரிலான அணுசக்திக் கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்தபோது, மின்குமிழ் ஒளியை முதன்முதலாக இலங்கையர்கள் கண்டுகொண்ட தினமான 1882 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதியை கருத்தில் கொண்டு, வருடாந்தம் ஜூன் மாதம் 26 ஆம் திகதி தேசிய எரிசக்தி தினமாகப் பிரகடனப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 26 ஆம் திகதி தேசிய எரிசக்தி தினத்தைப் பிரகடனப்படுத்துவதற்கும், பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுவதற்காக முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 26 ஆம் திகதியன்று ஆரம்பித்து அடுத்த வருடம் ஜூன் மாதம் 26 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்டு தேசிய பரிசளிப்பு விழாவில் நிறைவு பெறச் செய்வதற்கும், மின்சக்தி அமைச்சரும் எரிசக்தி அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. இலங்கை திரவப் பெற்றோலிய வாயு (LPG) உற்பத்தித்துறையை மீள்கட்டமைத்தல்**

இலங்கையில் திரவப் பெற்றோலிய வாயு உற்பத்தித்துறையை மீள்கட்டமைத்தல் தொடர்பாக பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வர்த்தக அமைச்சரின் தலைமையில் அமைச்சரவை உப செயற்குழுவொன்றை நியமிப்பதற்காக 2021 ஜூன் மாதம் 07 ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, எமது நாட்டில் வாயு உற்பத்தித்துறையில் ஈடுபடும் கம்பனிகளின் பிரதிநிதிகள், ஏற்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்துறை நிபுணர்களின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் உடன்பாடு எட்டப்பட்ட விடயங்களுக்கு அமைவாக அமைச்சரவை உப செயற்குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட கீழ்க்காணும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாவனையாளர் விவகாரங்கள் தொடர்பான அதிகாரசபை மூலம் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள 12.5 கிலோகிராம் எடை கொண்ட வீட்டுப் பாவனைக்கான எரிவாயுவை 1493 ரூபாவுக்கு லிட்ரோ எரிவாயு கம்பனி மற்றும் லாஃப் எரிவாயு கம்பனி தொடர்ந்தும் சந்தையில் விற்பனை செய்தல்

எரிவாயுக் கொள்வனவின் போது, போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் போன்றவற்றை இரு கம்பனிகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்வதற்கும், அதற்காக ஹம்பாந்தோட்டை எரிவாயு முனையத்தைப் பயன்படுத்தல்

நாட்டுக்கு தேவையான திரவப் பெற்றோலிய வாயு (LPG) கொள்வனவுக்கான பெறுகை நடவடிக்கைகள், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகளை முறையாக நடத்திச் செல்வதற்காக லிட்ரோ எரிவாயு கம்பனி மற்றும் லாஃப் எரிவாயு கம்பனியின் பிரதிநிதிகள் அடங்கலாக குறித்த துறைசார் நிபுணத்துவ அறிவுகொண்ட உத்தியோகத்தர்களுடன் கூடிய குழுவொன்றை நியமித்தல்.

உப செயற்குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ள பொறிமுறையை எதிர்வரும் 06 மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தி அதன் முன்னேற்றத்தின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கைகளை எடுத்தல்.

***(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)***

# பரிசோதனைகளிலிருந்து தவறுபவர்கள் டெல்ட்டா தொற்றுடன் இனங்காணப்படலாம்

## வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளிலிருந்து தவற விடுபடும் ஓரிருவரால் டெல்ட்டா போன்ற தொற்றுடன் கூடிய நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பி.சி.ஆர் பரிசோதனையினூடாக நூறு வீதம் சகல நோயாளர்கள் அடையாளம் காண முடியாது. உலகிலுள்ள சிறந்த பரிசோதனை முறை என்ற அடிப்படையிலேயே இந்தப் பரிசோதனை முறை பயன்படுத்தப்படுகின்றது.

இருந்தபோதிலும் இறந்த பரிசோதனையிலும் குறைபாடுகள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. அதன் காரணமாகவே வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் நாட்டுக்கு வருவதற்கு முன்னர் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்றும்



விமான நிலையத்துக்கு வந்ததன் பின்னரும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளோம்.

அதேபோன்று 14 நாட்கள் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கு வலியுறுத்தப்படுகின்றது. தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளின் பின்னர் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளளப்படுகின்றது. வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்குள் வரும் புதிய வைரஸ் வகைகளின் தாக்கத்தை குறைப்பதற்காகவே இந்தப் பரிசோதனை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இருந்தபோதிலும் இந்த முறையில் ஒரு வீத குறைபாடு ஏற்படுமாக இருந்தால் ஆயிரம் பேர் நாட்டுக்குள் வரும்போது 10 பேருக்கு தொற்றுடன் சமூகத்தை வந்தடையலாம். ஏதாவது ஒருமுறையில் கட்டாயம் நோயாளர்கள் சமூகத்தில் செயற்படுவார்கள்.

இந்த காரணங்களினால் அநேகமான நேரங்களில் ஓரிரு நோயாளர்களாவது தோற்றம் பெறுவர். அது எமது தவறு இல்லை. இந்த குறைபாடுகளினால் ஏற்படக்கூடிய விளைவுகளை குறைத்துக்கொள்வதற்காகவே இரண்டு அல்லது மூன்று தடவைகள் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு பரிசோதனைகளிலிருந்து தவறவிடப்படுபவர்களுக்கிடையில் டெல்ட்டா தொற்றுடைய நோயாளர்கள் உருவாவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார்.

# 'எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு' திட்டத்தின் 16ஆவது கட்டம் கிளிநொச்சி மருத்துவமனைக்கு





ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஒருங்கிணைவாக ஆரோக்கியமான நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவில் உருவானதும் நாடுபூராவும் நடைமுறைப்படுத்துவதுமான 'ஜன சுவய' கருத்திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சமூக நலத்திட்டத்தின் 16ஆவது கட்டமாக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு இருபத்திமூன்று இலட்சத்து இருபது ஆயிரம் (23,20,000) ரூபா பெறுமதியான Dialysis Machine 01 உபகரணம் நன்கொடையாக நேற்று வழங்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவால் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் சரவணபவனிடம் இவ்வாறு நன்கொடையாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரன்சித் மத்தும பண்டார, தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, சிரேஷ்ட பிரதித் தலைவர் ராஜித சேனாரத்ன, வைத்தியர் காவிந்த ஜயவர்தன, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாசந்திரா பிரகாஷ் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், டி.சித்தார்த்தன், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு, வெளிநாட்டு ஆதரவாளர்கள் 'ஜன சுவய' கருத்திட்டத்தில் இணைந்துகொண்டு எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர்.

# துப்பாக்கிச்சூட்டில் மானொன்று பலி



(ஜூட் சமந்த)

மிருகங்களை வேட்டையாடுபவர் ஒருவரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மான் ஒன்று உயிரிழந்துள்ளது.

நேற்றுக் காலை மாதம்பே, பனிரெந்தாவ காட்டுப்பகுதிக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பனிரெந்தாவ காட்டுப்பகுதியில் வாழும் மான்கள் உள்ளிட்ட காட்டு விலங்குகள் இனந்தெரியாதவர்களால் வேட்டையாடப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். வேட்டையாளர் ஒருவரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மான் ஒன்று உயிரை பாதுகாத்துக்கொள்வதற்காக அந்த கிராமத்திலுள்ள தோட்டத்துக்கு நேற்றுக் காலை வருகை தந்துள்ளது.

இவ்வாறு துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிய மானின் உயிரைக் காப்பாற்ற அந்தப் பிரதேச மக்கள் முயற்சி எடுத்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான மானை காப்பாற்றுமாறு பிரதேச மக்கள் புத்தளம் உதவி வனஜீவராசிகள் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளனர்.

இருந்தபோதிலும் அதிகாரிகள் குறித்த இடத்துக்கு வருகைதர காலம் தாமதமானதால் அந்த மான் உயிரிழந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

50 கிலாகிராம் நிறையுடைய மான் ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

# எரிபொருள் விலை அதிகரிப்பை எதிர்த்து எதிர்க்கட்சி கொழும்பில் ஆர்ப்பாட்டம்










(படப்பிடிப்பு : கிரிஷான் காரியவசம்)

அரசாங்கம் தன்னிச்சையாக எரிபொருள் விலையை அதிகரித்து மக்களுக்கு சுமையை ஏற்படுத்தியதற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் நேற்றுக் காலை பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடத்தப் பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்திலிருந்து நாடாளுமன்றம்வரை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வாகனப் பேரணி மூலம் உறுப்பினர்கள் கலந்துகொண்டு வருகை தந்ததுடன் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தித் தலைவருமான சஜித் பிரேமதாச தலைமையில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# பிரேஸில் குடியரசின் பிரதித் தூதுவர் - பாதுகாப்பு செயலாளருக்கும் இடையில் சந்திப்பு



இலங்கைக்கான பிரேஸில் குடியரசின் பிரதித் தூதுவர் வின்ஸ்டன் அலெக்சாண்டர் சில்வா தனது பதவிக்காலத்தை பூர்த்திசெய்துவிட்டு பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவுடன் (ஓய்வு) தனது பிரியாவிடை சந்திப்பை மேற்கொண்டார்.




பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது தனது பதவிக்காலத்தில் பாதுகாப்புச் செயலாளரினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்கு பிரேஸில் பிரதித் தூதுவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் ஊழியர்களுக்கு பிரேஸில் தூதரகத்தினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்காக வெளியேறும் பிரதித் தூதுவருக்கு ஜெனரல் குணரத்ன தனது நன்றியைத் தெரிவித்தார்.

மேலும், இரு நாடுகளுக்கிடையில் தற்போது நிலவும் உறவுகளை மேலும் வலுப்படுத்த வழிவகுத்த பிரதித் தூதுவரின் உதவியை பாதுகாப்புச் செயலாளர் பாராட்டினார். கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்தும் சுகாதார வழிகாட்டுதல்களுக்கமைய இந்தக் கூட்டம் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் தினேஷ் நாணயக்கார மற்றும் இலங்கையிலுள்ள போட்ஸ்வானா குடியரசின் தூதுவர் ஜெயசிரி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சமூக இடைவெளியை பேணாதவர்களை கைதுசெய்ய நடவடிக்கை



பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப் பட்டுள்ள நிலையில், வியாபார நிலையங்கள் உட்பட பொது இடங்களில் சமூக இடைவெளியைப் பேணாதவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பல இடங்களில் பொதுமக்கள் சமூக இடைவெளியைப் பேனாது செயற்பட்டதைக் கண்காணித்ததைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பதில் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயணக்கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிவுறுத்தல்களை பொதுமக்கள் பின்பற்றுவதை உறுதிசெய்வதற்காகவே இன்றுமுதல் நாடுபூராகவும் விசேட பொலிஸ் குழுக்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியதற்காக கைது செய்யப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட நட்டத்தை முன்வைப்பதற்கான காலம் 2ஆம் திகதிவரை நீடிப்பு

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் தீ விபத்திற்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஏற்பட்ட நட்டத்தை முன்வைக்கும் கால எல்லை அடுத்த மாதம் 2ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

reformsShmoj.gov.lk என்ற மின்னஞ்சல் ஊடாக அல்லது 0112 445447 என்ற தொலை நகல் இலக்கத்தின் ஊடாக இதற்காக விண்ணப்பிக்க முடியும் என நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்பட்டுள்ள இழப்புகளுக்கு இடைக்கால நட்டஈட்டை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கும், சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கும், அனர்த்தத்திற்குள்ளான துறைகளுக்கும் உயர்ந்தபட்ச இழப்பீட்டை வழங்க கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக நியமிக்கப்பட்ட ஐந்து உப குழுக்களினதும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான நிபுணர்கள் நாட்டில் இல்லாததனால் வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட கப்பல் கம்பெனியிடமிருந்து கூறப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையின் முதலாவது தொகுதி, வாழ்வாதாரத்தை இழந்துள்ள மீனவர்களுக்கு வழங்கப்படும். படகு, வலை போன்ற உபகரணங்களுக்காக இழப்பீடு வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

# விபத்துக்களில் 11 பேர் பலி

நாட்டில் நேற்று வரையான கடந்த 24 மணிநேரத்தில் இடம்பெற்ற வாகன விபத்துக்களால் 11 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்இ

அவற்றுள் 8 மரணங்கள் நேற்றைய தினத்தில் இடம்பெற்றது. நாளொன்றில் 11 மரணங்கள் பதிவாகின்றமை சாதாரணமான ஒரு நிலமை அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களுள் பாதசாரிகள் இருவர்இ மோட்டார் சைக்கிளில் பயணித்த 6 பேர்இ சைக்கிளில் பயணித்த 2 பேர் மற்றும் லொறியில் பயணித்த ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

பாதசாரிகளே அதிகளவில் விபத்துக்களால் உயிரிழப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# டேட்டா கட்டணமின்றி வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக கல்வி வசதி

டேட்டா தரவுக் கட்டணங்களின்றி வீடியோ தொழில்நுட்பத்தின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி வசதிகளை வழங்கும் முறையொன்று இம் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் - என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதேபோன்று எல்.எம்.எஸ்.முறையின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கைகளுக்குரிய திட்டம் இம்மாதம் 25ஆம் திகதிமுதல் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த இரண்டு ஆண்டுகளில் 4G தொழில்நுட்பத்துடன் 10 ஆயிரம் பாடசாலைகளை மேம்படுத்தும் திட்டங்கள் அடங்கிய அமைச்சரவைப் பத்திரமும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், கல்வியை அணுகுவதில் கிராமப்புறங்களில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் இங்கு கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

அத்துடன், சரியான திட்டமின்றி சில பகுதிகளில் தொலைபேசி நிறுவனங்களால் தொலைபேசி கோபுரங்கள் கட்டப்படுவதால் இந்தப் பிரச்சினைகள் எழுந்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மலையக செய்திகள்

thamilanmalayagam@gmail.com

### எரிபொருள் விலை அதிகரிப்பை எதிர்த்து

# கினிகத்தேனையில் ஜே.வி.பி. போராட்டம்



**க.கிஷாந்தன்**

அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருட்களின் விலையை உடன் குறைக்குமாறும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் மக்கள் விடுதலை முன்னணியால் நாடு தழுவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், இதன் ஓர் அங்கமாக கினிகத்தேனை நகரில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போராட்டத்தில் ஜே.வி.பியின் செயற்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர். இவர்கள் தமது போராட்டம் குறித்து தெரிவிக்கையில்,

மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மரத்தில் இருந்து விழுந்தவரை மாடு முட்டுவதுபோல், எரிபொருட்களின் விலையை அரசாங்கம் அதிகரித்துள்ளது. இதனால் மக்களுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே, எரிபொருட்களின் விலை அதிகரிப்பு தீர்மானத்தை அரசு மீளப்பெற வேண்டும்.

அதேபோன்று, முன்னறிவிப்பு, முன்னேற்பாடுகளின்றி இரசாயன உரப்பயன்பாட்டுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். விளைச்சல்களும் அதிகரித்துவருகின்றன. எனவே, இதற்கான பொறிமுறையை அரசாங்கம் உடன் வகுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர். ஜே.வி.பி.யினரால் முன்னெடுக்கப்படும் குறித்த எதிர்ப்பு நடவடிக்கைகள் நாளைய தினமும் நாட்டின் பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளன.

# 18 மதுபான போத்தல்களுடன்

## ஹட்டனில் ஒருவர் கைது



**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

**ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹட்டன் - குடாகம பகுதியில் வீடொன்றில் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், 18 மதுபான போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஹட்டன் கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே 18 மதுபான போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்வரும் 7 ஆம் திகதி ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஹட்டன் கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.**

# கொரோனா அலையில் சிக்கி கண்டியில் 355 மரணங்கள்

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

**கண்டி**

மத்திய மாகாணத்தில் இதுவரை 550 இற்கும் மேற்பட்ட கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. அதில் கண்டி மாவட்டத்திலேயே அதிகளவு மக்கள் மரணித்துள்ளனர். மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, கொரோனா தொற்றின் பாதிப்பால் கண்டியில் ஏற்பட்ட மரணங்கள் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்திலேயே அதிகளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இது அண்ணளவாக மற்றைய இரு மாவட்டங்களில் உள்ள தொகையை விடவும் இரு மடங்கு எனவும் தெரியவருகிறது. அதன்படி, கண்டி மாவட்டத்தில் இதுவரை 355 இற்கு மேற்பட்ட மரணங்களும், மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் 90 இற்கு மேற்பட்ட மரணங்களும் கொரோனா தொற்று காரணமாக ஏற்பட்டதாகப் பதிவாகியுள்ளன.

# 110,000 மாணவர்களுக்கு உணவுப்பொதிகள் வழங்கிவைப்பு

## ஊவா ஆளுநர் தலைமையில் முன்னெடுப்பு

அரச சார்பற்ற நிறுவனமான Save the Children மூலம் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் உணவுப்பங்கீடுகள் (Take-Home Rations) விநியோகத்திட்டம், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மிலின் தலைமையில் மொனராகலை மாவட்டத்தின் புத்தல, ஒக்கம்பிட்டிய, தம்பேயாய ஆரம்பப் பாடசாலையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிதி அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சுடன் Save the Children அமைப்பு செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், பாடசாலை மாணவர்களின் கல்வியறிவு மற்றும் கவனத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பாடசாலை மாணவர்களுக்கு உணவளிக்கும் திட்டத்தின் பேண்தகைமையை வலுப்படுத்தும் நோக்கில் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

கொரோனா நெருக்கடிகளுக்கு மத்தியில் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக பதுளை, மொனராகலை, கிளிநொச்சி, நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள 887 ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி பயிலும் 110,000 மாணவர்களுக்கு இந்த உணவுப் பொதிகள் பகிர்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



**தலவாக்கலை நிருபர்**

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் மலைத்தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட பாலகிருஷ்ணன் சதீஸ் (தமிழ், சிங்களம்) மொழிபெயர்ப்பாளராக அண்மையில் கம்பளை நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

பாலகிருஷ்ணன் - கமலாதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரான இவர் தற்போது பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள பொலிஸ் ஊடகப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தராவார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை கிறேட் வெஸ்டன் தமிழ் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை தலவாக்கலை புனித பத்திரிசியார் கல்லூரியிலும், உயர்தரத்தை தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திலும், பூர்த்தி செய்துள்ளதோடு, தனது பொலிஸ் பயிற்சியினை கடானை பொலிஸ் பயிற்சி வித்தியாலயத்திலும், குண்டசாலை பொலிஸ் பயிற்சி வித்தியாலயத்திலும் பூர்த்தி செய்துள்ளதுடன், ஆங்கில மொழி டிப்ளோமா கற்கைநெறியை குண்டசாலை ஆங்கில மொழி பயிற்சி நிலையத்திலும் பூர்த்தி செய்துள்ளார்.

# ஐக்கிய மக்கள் சக்தி கம்பளையில் போராட்டம்



(கம்பளை நிருபர்)

எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதைக் கண்டித்தும், அவற்றின் விலையை உடன் குறைக்குமாறு வலியுறுத்தியும் கெலிஓயா நகரில் நேற்று எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போராட்டத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்கி ஜயவர்தன உட்பட கட்சியின் செயற்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர்.



**பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், எட்டியாந்தோட்டை பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்று பொது பஸ் தரிப்பிடத்தின் எதிரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் பிரதேச சபைக்கு வாகனங்களைத் தள்ளிக்கொண்டு வந்து அமர்வுகளில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.**

**(படப்பிடிப்பு: அருண் யுகேஷ்)**




# 18 உயிர்களைப் பலியெடுத்த பம்பரலகந்த பாண்டி ஆறு

**மஹிந்த குமார்**

இரத்தினபுரி, பம்பரலகந்த பிரதேசத்திலுள்ள பாண்டி ஆற்றைக் கடந்து செல்ல பாலம் ஒன்றின்மையால் பாண்டி ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு இதுவரையில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், தேயிலைத் தோட்டத்திற்கு வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள் மற்றும் சுமார் 10 குடும்பங்களை சேர்ந்த அப்பிரதேச மக்களும் நாளாந்தம் ஆற்றைக் கடந்து பயணிக்கின்றார்கள்.

பாண்டி ஆற்றைக் கடந்து செல்ல முடியாவிட்டால் பம்பரலகந்த பிரதேசத்தில் இருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் சென்று வேறு வழிகளில் வர வேண்டும் எனவும் அப்பிரதேச மக்கள் தெரிவித்தார்கள்.

சிவனொளிபாத மலை பகுதியில் 100 மில்லி மீற்றருக்கு அதிகமாக மழை பெய்தால் பாண்டி ஆறு பெருக்கெடுக்கும் எனவும், அப்போது ஆற்றை கடந்து செல்ல முடியாமல் அப்பிரதேச மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுப்பதாகவும் தெரிவித்தார்கள்.

நாளாந்தம் கூலி வேலை செய்யும் பம்பரலகந்த தோட்ட மக்கள் பாண்டி ஆற்றைக் கடந்தே நாளாந்தம் வேலைக்குச் செல்கின்றார்கள். அவர்கள் வேலைக்குச் சென்று வீட்டிற்கு வரும்போது, பல தடவை பாண்டி ஆறு பெருக்கெடுத்து காணப்படும்போது வீட்டிற்குச் செல்ல முடியாமல் பல இன்னல்களை சந்தித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அத்தோடு, தேயிலைத் தோட்டங்களுக்குச் சென்று கொழுந்து பறித்துக் கொண்டு வரும் தொழிலாளர்கள் பல பேர் தேயிலை மூட்டைகளுடன் பாண்டி ஆற்றில் அடித்துச் சென்று விபத்துக்குள்ளானதாகவும் அப்பிரதேச தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், ஜூன் 8 ஆம் திகதி பெய்த கடும் மழையினால் பாண்டி ஆறும் பெருக்கெடுத்துக் காணப்பட்ட நிலையில், அன்று இரவு 8 மணியளவில் 31 வயதுடைய, சாந்த என்னும் இளைஞன், வீட்டுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ள பம்பரலகந்த தோட்டத்திலுள்ள கடைக்கு சென்றிருந்த நிலையில், மகன் ஒரு மணித்தியாலம் கடந்தும் வீட்டிற்கு வராத நிலையில் அதிர்ச்சியடைந்த தாயார், தனது மகனின் நண்பனை அனுப்பியுள்ளார்.


எனினும், பொருட்களுடன் தனது நண்பன் சாந்தவைக் கண்டு, ''ஆறு பெருக்கெடுத்துக் காணப்படுகின்றதே..? எப்படி நீ ஆற்றைக் கடந்து வருவாய்?'' என வினவியுள்ளார்.

இதற்கு பதிலளித்த சாந்த, ''என்ன செய்வது..? நான் எப்படியாவது ஆற்றைக் கடக்க வேண்டுமே.. இல்லையென்றால் நான் எப்படி வீட்டிற்கு வருவது? வீட்டிலும் அம்மாவிற்கும், பாட்டிக்கும் உணவுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் இல்லையே..'' என்று கூறியுள்ளார். இதனைத் தொடர்ந்து சாந்த ஆற்றைக் கடந்து வர முயன்ற போது இரண்டு, மூன்று அடி ஆற்றைக் கடந்து வரும்போது, ஆற்றில் அடித்து செல்லப்பட்டுள்ளார்.

சாந்த ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டதைக் கண்ட அவனது நண்பன் ஓட்டமாக ஓடி சாந்தவின் தாயாரிடம் கூறியுள்ளார். அதிர்ச்சியில் சாந்தவின் தாயார் மயங்கி வீழ்ந்ததையடுத்து, அயலவர்களின் உதவியுடன் சாந்தவைத் தேடியுள்ளனர். எனினும், 8 ஆம் திகதி இரவு முழுவதும் தேடியும் சாந்த கிடைக்கவில்லை.

அடுத்த நாள் 9 ஆம் திகதி பம்பரலகந்த பிரதேசத்திலுள்ள சுமார் இருநூறு இளைஞர்கள் வெவல்வத்த பொலிஸ் நிலைய அதிகாரிகள் இரத்தினபுரி பொலிஸ் நிலைய அதிகாரிகள் இணைந்து சாந்தவைத் தேடியுள்ளனர். மூன்று நாட்கள் தொடர்ந்து தேடிய போதிலும் சாந்த கிடைக்கவில்லை.

நான்காவது நாள் சாந்த அடித்துச் செல்லப்பட்ட இடத்திலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் உள்ள ஒரு பாரிய குழியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவ்வாறு அப்பிரதேசத்தில் பல மரணங்கள் சம்பவித்துள்ளன. ஒவ்வொரு மரணத்தின் போதும் அப்பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளுக்கு பல தடவை தெரிவித்துள்ளார்கள். தமக்கு வாகனங்கள் ஓட்டிச் செல்லும் அளவில் பாலம் தேவையில்லை. உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பாதங்களை கவனமாக வைத்து செல்வதற்கு ஒரு கம்பி பாலத்தை மற்றும் அமைத்து தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆனால், இதுவரையிலும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில், இந்த ஆற்றைக் கடந்து வந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர். கடந்த 8 ஆம் திகதி உயிரிழந்தவரின் மாமா, 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 திகதி ஆற்றில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார். அதேபோன்று, உயிரிழந்தவரின் தாத்தா 2013 ஆண்டு ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.



# இலுப்பைக்கடவையில் கிராம அலுவலகர் கொலை தொடர்பான சந்தேகநபருக்கு பிணை

## மன்னார் மேல்நீதிமன்றம் அனுமதி









(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராகவும் இலுப்பைக்கடவை கிராம உத்தியோகத்தராகவும் கடமையாற்றிய எஸ்.விஜியேந்திரன் என்பவரின் கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மேல் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி எஸ்.டினேஸன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவின் கடந்த வருடம் டிசம்பர் மாதம் கடுமையாக தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட கிராம அலுவலகரின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட நபர் நேற்று செவ்வாய்கிழமை மன்னார் மேல்நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இலுப்பைக்கடவை கிராம அலுவலகரின் கொலையுடன் தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்படும் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு தொடர்ச்சியாக விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை குறித்த வழக்கு மன்னார் மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபர் குறித்து மன்னார் மேல்நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஊடாக பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த பிணை விண்ணப்பத்தின் கட்டளை நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

கட்டளையின் அடிப்படையில் சந்தேகநபர் கடந்த 6 மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அதனை விதிவிலக்கான காரணமாகக்கொண்டும், நாட்டில் அதிவேகமாக பரவி வருகின்ற கொரோனா தொற்றை மன்று தனது மேலான கருத்திற்கொண்டும் குறித்த சந்தேகநபரை 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும், இரண்டு சரீர பிணையிலும் செல்லவும், இருவரில் ஒருவர் மனுதாரராகவும் இருக்கவேண்டும் என்ற அடிப்படையிலும், மாதத்தில் இரு ஞாயிற்றுக்கிழமைகளில் இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் காலை 9 மணிமுதல் 12 மணிவரையுமான நேரத்தில் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் மன்னார் மேல்நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கு விசாரணையுடன் தொடர்புடைய குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரிகள் சந்தேகநபர் தொடர்பாக எவ்வித ஆதாரங்களையும் மன்றில் முன்வைக்கவில்லை.

இதனால் ஆதாரங்கள் எவையும் நிரூபிக்க முடியாத நிலையில், சட்டத்தரணிகளினால் மன்றில் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில், சந்தேகநபர் நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார் – என்றார்.

# அளவுக்கதிகமான மது போத்தல்களுடன் இருவர் பொலிஸாரால் கைது



(சாவகச்சேரி நிருபர்)

பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட வேளையில் நேற்று முன்தினம் காலை மற்றும் பிற்பகல் வேளைகளில் அளவுக்கதிகமாக மது போத்தல்களைக் கொண்டுசென்ற இருவர், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை சாவகச்சேரி நகர் பகுதியில் 180 மில்லிலீற்றர் அளவுடைய 50 சாராயப் போத்தல்களுடன் நபர் ஒருவர் கைதாகியுள்ளார். அதேவேளையில் பிற்பகல் கைதடியிலிருந்து கிளிநொச்சி நோக்கி கொண்டுசெல்லப்பட்ட 180 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய 100 சாராயப் போத்தல்களுடன் மேலும் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மது ஒழிப்புப் பிரிவினர் இந்தக் கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# மன்னாரில் 159 கொரோனா நோயாளர்கள் அடையாளம்

## மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வினோதன்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த 21 நாட்களில் 159 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், மாவட்டத்தில் புத்தாண்டு கொத்தணியோடு அதிகமான இளவயதினர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையில் மேலும் புதிதாக 10 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சேர்த்து ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தற்போதுவரை 159 கொரோனா நோயாளர்களும், இந்த வருடம் 649 கொரோனா நோயாளர்களும், மன்னாரில் மொத்தம் 666 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில் புத்தாண்டு கொத்தணியோடு தொடர்புடைய 322 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.




இவர்களில் அதிகமானவர்கள் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிப்பவர்களாக அல்லது தொழில் செய்பவர்களாக 242 நோயாளர்கள் காணப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் நானாட்டான், மடு, மாந்தை மேற்கு, முசலி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

புத்தாண்டு கொத்தணியோடு தொடர்புபட்ட நபர்கள் இளவயதுடையவர்களாகவும் தொழில் செய்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இந்தப் புத்தாண்டு கொத்தணியோடு தொடர்புபட்டவர்கள் 49 பேர் ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள். இவர்களில் பலர் சிகிச்சையை நிறைவுசெய்து வீடு திரும்பி இருக்கின்றார்கள்.

இந்த பயணத்தடை தளர்வு நாட்களில் மீன்பிடி வாடிகள், தொழிற்சாலைகள் போன்ற நெருக்கமான இடங்களில் பணிபுரிபவர்கள் சுகாதார நடை முறைகளை உரிய முறையில் கடைப்பிடித்து உங்களுடைய கடமைகளை செய்யவேண்டும்.

ஏதேனும் குணங்குறிகள் தென்பட்டால் வீடுகளிலேயே உங்களை நீங்கள் சுய தனிமைப்படுத்திக்கொண்டு பின்னர் சுகாதாரத்துறையினருக்கு அறிவியுங்கள்.

மன்னார் தாராபுரம் பகுதியில் அமைந்திருக்கின்ற இடைநிலை சிகிச்சை நிலையத்தில் இதுவரையில் 400 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு 306 பேர் சிகிச்சை நிறைவுசெய்து வீடுகளுக்குத் திரும்பியிருக்கின்றார்கள் .

இதில் இரண்டாவது கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையமானது நானாட்டான் பிரதேசத்திலுள்ள நறுவிலிக்குளம் ஆயுர்வேத வைத்தியசாலையில் அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

இவை அடுத்த வாரம் நடை முறைக்கு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# ஒரு இலட்சம் வேலைவாய்ப்பை புறக்கணிக்க சாவகச்சேரி நகரசபை தீர்மானம்

(சாவகச்சேரி நிருபர்)

ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிநெறிகளைப் பூர்த்திசெய்தவர்களை சாவகச்சேரி நகரசபையில் கடமைக்கு அமர்த்த சபை எதிர்ப்புத் தெரி வித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே சபையில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் முதற்கட்டமாக தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிநெறிகளைப் பூர்த்திசெய்தவர்களை உள்ளூராட்சி சபைகளுக்குள் கடமைக்கு இணைப்பதற்கான முன்னாயத்தங்கள் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில், அவ்வாறான நியமனங்கள் சாவகச்சேரி நகரசபைக்கு கிடைக்கப்பெறும் பட்சத்தில் அதனை நிராகரிக்க வேண்டும் என சபை உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தியிருந்தனர்.

இதன்போதே ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் உள்வாங்கப் பட்டோரை சபைக்குள் உள்ளீர்க்காது நிராகரிப்பதென சபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

# வவுனியாவிற்கு எதிர்வரும் மாதம் பிசிஆர் இயந்திரம் கிடைக்கும்

## திலீபன் எம்.பி. தெரிவிப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்திற்கு எதிர்வரும் ஜூலை மாதம் பிசிஆர் இயந்திரம் கிடைக்கும் - என மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

நேற்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் ஆகியோர் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியை சந்தித்து கலந்துரையாடினர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார அமைச்சரை எனது கட்சித் தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து சந்தித்து கலந்துரையாடினோம். இதன்போது வவுனியா மாவட்டத்திற்கு பிசிஆர் இயந்திரத்தின் அவசர தேவை குறித்து மீண்டும் வலியுறுத்தினோம். இதனையடுத்து அதிகாரிகளை தொடர்புகொண்ட சுகாதார அமைச்சர் உடனடியாக வவுனியாவிற்கு பிசிஆர் இயந்திரத்தை வழங்குமாறு பணிப்புரை விடுத்தார். அந்தவகையில் எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் பிசிஆர் இயந்திரம் வழங்கப்படும் என எம்மிடம் உறுதியளித்துள்ளார்.

ஏற்கனவே, எமது கோரிக்கையை ஏற்று வவுனியா வைத்தியசாலைக்கு அதிகாரிகளை அனுப்பி அங்குள்ள நிலைமைகளை பார்வையிட்டுள்ளதாகவும், உடனடியாக வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில், வவுனியா மாவட்டத்தில் பிசிஆர் இயந்திரம் பெற்றுக்கொள்வதன் மூலம் சுகாதாரப் பிரிவினர் எதிர்நோக்கிய பாரிய பிரச்சினை ஒன்று முடிவுக்கு வருவதுடன், மக்களுக்கும் பிசிஆர் முடிவுகள் உடனுக்குடன் கிடைப்பதற்கும் வழிவகுக்கப்பட்டுள்ளதுடன், இதற்கு வழிசமைத்த அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கின்றேன் – என்றார்.


# மூன்றுமுறிப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் 25 பேர் உட்பட 46 பேருக்கு கொவிட் தொற்று உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியா, மூன்றுமுறிப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் 25 பேர் உட்பட 46 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் முடிவுகள் நேற்று முன்தினம் இரவு வெளியாகின.

அதில், சூடுவெந்தபுலவு பகுதியில் எட்டு பேருக்கும், சகாயமாதாபுரம் வைரவர் கோவிலடி பகுதியில் எட்டு பேருக்கும், மறவன்குளம் பகுதியில் ஒருவருக்கும், சமனங்குளம் பகுதியில் ஒருவருக்கும், வேப்பங்குளம் பகுதியில் ஒருவருக்கும், புளியங்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், நெடுங்கேணி பகுதியில்



ஒருவருக்கும், மதவாச்சி பகுதியில் நான்கு பேருக்கும், மாமடு பகுதியில் ஒருவருக்கும், தவசிகுளம் பகுதியில் இருவருக்கும், கல்மடு பகுதியில் இருவருக்கும், செட்டிக்குளம் வீரபுரம் பகுதியில் இருவருக்கும், பூனாவ பகுதியில் ஒருவருக்கும், முருகனூர் பகுதியில் ஒருவருக்கும், போகஸ்தலாவ பகுதியில் ஒருவருக்கும், சிவபுரம் பகுதியில் ஒருவருக்கும், ஆசிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், வவுனியா தெற்கு குருந்துபிட்டிய பகுதியில் இருவருக்கும், பட்டாணிச்சூர் பகுதியில் ஒருவருக்கும், மகாரம்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், யாழ். சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த வவுனியாவில் உள்ள ஒருவருக்கும் என 46 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதில் தொற்றாளர்களாக இனங்காணப்பட்ட சூடுவெந்தபுலவு மற்றும் சகாயமாதாபுரம், வைரவகோவிலடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவர் மரணமடைந்துள்ளதுடன், 25 தொற்றாளர்கள் வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியிலுள்ள ஆடைத்தொழிற்சாலையில் கடமையாற்றுபவர்களாவர்.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியாவில் இரு ஆடைத்தொழிற்சாலை தொற்றாளர்களின் எண்ணிக்கை 100 கடந்து அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவம் – விசேட அதிரடிப்படையினரை பயன்படுத்தி சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துங்கள்

## ஊற்றுப்புலம் மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஊற்றுப்புலம் கிராமத்தில் அண்மைய நாட்களாக இடம்பெறுகின்ற அதிகரித்த சட்டவிரோத மணல் அகழ்வை இராணுவம் அல்லது விசேட அதிரடிப்படையினரை பயன்படுத்தி கட்டுப்படுத்துமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊற்றுப்புலம் கிராமத்தின் குளத்து பகுதியை அண்டியதாகவும், அங்குள்ள சில விவசாயிகள் வருடத்திற்கு ஒரு முறை நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற பிரதேசங்களிலும் இரவு பகலாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது.

கிராமத்தில் வசிக்கின்ற சிலரின் ஒத்துழைப்புடன் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக காடுகள் மற்றும் விவசாய நிலங்கள், வீதிகள் என்பன மிக மோசமான பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

கிராமத்தில் அக்கறையுள்ளவர்கள், சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களின் அச்சுறுத்தல் காரணமாக அமைதியாகிவிட்டனர் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாருக்குக் கூட தகவல் வழங்க பொதுமக்கள் அஞ்சுகின்றனர். காரணம், தகவல் வழங்குகின்றவர்கள் யார் என்பதனை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்கள் அறிந்துகொள்கின்றார்கள் என்றும் இதனால் தமது பாதுகாப்புக் கருதி பொதுமக்கள் அமைதியாகிவிடுகின்றனர் என கிராமத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவம் அல்லது விசேட அதிரடிப்படையினரை பயன்படுத்தி சட்டவிரோத இந்த மணல் அகழ்வை கட்டுப்படுத்துமாறும் மக்கள் கோரியுள்ளனர்.

# இணைய வசதியின்மையால் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்பு; திருமலை கோமரங்கடவல மாணவர்கள் அசௌகரியம்





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் கோமரங்கடவல மற்றும் மொரவெவ பிரதேசங்களில் இணைய வசதி இல்லாமையினால் மாணவர்களின் இணையவழி கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 தொற்றினால் பாடசாலை மூடப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில், கிராமப்புற மாணவர்கள் இன்னும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இணையவழிக் கல்வியை கற்பிப்பதற்காக பெற்றோர்கள் தங்களது நகைகளை அடகுவைத்து கைத்தொலைபேசிகளை மாணவர்களுக்கு வாங்கிக்கொடுத்தும் மாணவர்கள் வீட்டின் கூரைக்கு மேல் மற்றும் வயல்வெளியை தேடியும், குளக்கட்டை தேடியும் சென்று இணைய வசதியை தேடவேண்டிய நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். ஆசிரியர்கள் இணையவழி ஊடாக கற்பிக்கும் சந்தர்ப்பத்தில் இணைய வசதி இல்லாமையினால் ஆசிரியர்கள் சொல்லும் விடயங்கள் மாணவர்களுக்குத் தெரியவில்லை எனவும், மாணவர்கள் சொல்லும் விடயங்கள் ஆசிரியர்களுக்கு விளங்குவதில்லை எனவும் இதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பாக, திருகோணமலை மாவட்டத்தில் கோமரங்கடவல மற்றும் மொரவெவ பிரதேசங்களிலுள்ள எத்தாபெந்திவெவ, கிராம மாணவர்கள் தங்களது கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, மிக விரைவில் இணையவழி கல்வியை தொடர இணைய வசதியை மிக விரைவில் பெற்றுத்தருமாறு மாணவர்களும் பெற்றோர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

## வாழைச்சேனையில் மூன்று வீதிகள் தனிமைப்படுத்தல்

(மீராவோடை நிருபர் – எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனையில் மூன்று வீதிகள் நேற்று முடக்கப்பட்டுள்ளன.

பிறைந்துறைச்சேனை - 206 சி கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பரகத் வீதி, 2ஆம் குறுக்கு வீதி, அப்துல்லாஹ் வீதி ஆகிய மூன்று வீதிகளுமே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் கொரோனா தொற்றுடன் சிலர் அடையாளம் காணப்பட்டதையடுத்து கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைக்கமைய பாதுகாப்புப் பிரிவினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடியில் பயணத்தடை நீக்கிய பின்னரும் வர்த்தக நிலையங்களை திறக்க தடை விதிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

பயணத்தடை நீக்கத்தின் பின்னர் காத்தான்குடியில் அத்தியாவசியப்பொருட்கள் விற்பனைசெய்யும் வர்த்தக நிலையங்கள் மாத்திரமே நேற்று இரண்டாவது நாளாகவும் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மருந்தகங்கள், பலசரக்குக் கடைகள், மரக்கறிக் கடைகள் மற்றும் பேக்கரிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள், உணவுப்பொருட்கள் விற்பனைசெய்யும் வர்த்தக நிலையங்கள் மட்டுமே திறக்கப்பட்டன.

கொரோனா பரவல் அதிகரித்துள்ளதன் காரணமாக அத்தியாவசியப் பொருட்கள் விற்பனைசெய்யும் வர்த்தக நிலையங்களைத் தவிர வேறு எந்தவொரு வர்த்தக நிலையங்களையும் திறக்கவேண்டாம் எனவும் அத்தியாவசிய சேவைகளான பாமசிகள், பலசரக்குக் (சில்லறை) கடைகள், பழக்கடை, மரக்கறிக் கடை, மீன், இறைச்சிக் கடை, பேக்கரிகள் மாத்திரமே தங்களது வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கைகளை பிற்பகல் 6 மணிவரை மாத்திரம் மேற்கொள்ளமுடியும்.

அத்தோடு, ஹோட்டல்கள் உட்பட ஏனைய எந்தவொரு வர்த்தக நிலையங்களும் திறக்க அனுமதிக்கப்படமாட்டாது எனவும் காத்தான்குடி நகருக்கான கொவிட் தடுப்புச் செயலணி காத்தான்குடி மக்களுக்கு அறிவித்துள்ளது.

வீதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் கண்காணிப்பு நடவடிக்கையிலும் பாதுகாப்புக் கடமையிலும் ஈடுபட்டுள்ளனர்.

# மட்டு. துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட மெய்ப்பாதுகாவலருக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

### வாய்த்தர்க்கமே காரணமென சந்தேக நபர் வாக்குமூலம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் பொதுமக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட அமைச்சரின் மெய்ப்பாதுகாவலரை எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் எ.சி.றிஸ்வான் நேற்று உத்தரவிட்டார்.

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவர் பொதுமகன் மீது நேற்று முன்தினம் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 34 வயதுடைய மகாலிங்கம் பாலசுந்தரம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட மெய்ப்பாதுகாவலர் நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் 6ஆம் திகதிவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு பிள்ளையாரடி பிரதேசத்திலுள்ள மென்றெசா வீதியில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீடு அமைந்துள்ளது. இந்நிலையில், இந்த துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த 34 வயதுடைய மகாலிங்கம் பாலசுந்தரம் கடந்த 4 தினங்களுக்கு முன்னர் அந்த வீதி வழியாக ரிப்பர் வாகனத்தில் கல் ஏற்றிக்கொண்டு சென்றவேளை, அமைச்சரின் வீட்டின் முன்பகுதியான வீதியில் வாகனங்கள் தரித்துநின்ற நிலையில், அதனூடாக குறித்த ரிப்பர் வாகனம் செல்லமுடியாது போயுள்ளது. இந்நிலையில், குறித்த பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதன்போது மெய்ப்பாதுகாவலருக்கும் ரிப்பர் சாரதிக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சம்பவ தினத்தன்று உயிரிழந்தவர் அவரது நண்பனான ஆட்டோ சாரதியுடன் முச்சக்கரவண்டியில் அமைச்சரின் வீட்டின் முன்னால் உள்ள வீதி ஊடாக வீடொன்றில் மணல் கொடுப்பது தொடர்பாக பேசிவிட்டு, அந்தப் பகுதியில் மதுபானம் அருந்திவிட்டு முச்சக்கரவண்டியில் திரும்பும்போது அமைச்சரின் வீட்டின் முன்பகுதியில் வெற்றுக்காணியிலுள்ள மாமரத்தின்கீழ் மெய்ப்பாதுகாவலர் அமர்ந்திருந்துள்ளார்.

இந்நிலையில் முச்சக்கரவண்டியில் சென்று குறித்த நபர் மெய்ப்பாதுகாவலருக்கு கைகாட்டிவிட்டு சென்ற நிலையில், மெய்ப்பாதுகாவலர் அவர்களை கைகாட்டி அழைத்துள்ளார். முச்சக்கரவண்டியில் சென்றவர்கள் திரும்பிவந்த நிலையில், உயிரிழந்தவருக்கும் மெய்ப்பாதுகாவலருக்குமிடையே நடந்த வாய்த்தர்க்கத்தினையடுத்து இந்த துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மெய்ப்பாதுகாப்பாளர் கைதுசெய்யப்பட்ட நிலையில், குறித்த சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.றிஸ்வான் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக சிரேஷ்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிறி தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுவருவதுடன், குறித்த பகுதியில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட மெய்ப்பாதுகாவலரது வவுணதீவு பிரதேசத்திலுள்ள வீட்டிற்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்று பிரதேச வீதிகளின் நிர்மாண பணிகளை துரிதமாக ஆரம்பிக்குமாறு உத்தரவு

### மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி



(எம்.எல்.சரிப்டீன்)

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வீதி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட வீதிகளை அபிவிருத்திசெய்தல் தொடர்பான துறைசார் முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடல் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் மாநகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஒரு இலட்சம் வீதி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உள்ளடங்கும் வீதிகளின் நிர்மாணப் பணிகளை துரிதமாக ஆரம்பிக்குமாறு நேற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி உத்தரவிட்டார்.

இந்நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம்.றாபி, மாநகர சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லாவின் பிரத்தியேக செயலாளர் ஜே.எம்.வஸீர், அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளர் எம்.ஐ.அஹ்மத் சஜீர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## முச்சக்கரவண்டி – சைக்கிள் மோதி காரைதீவில் விபத்து

### ஒருவர் படுகாயம்

(இ.இராஜ்குமார்)

கல்முனை நோக்கி சென்றுகொண்டிருந்த முச்சக்கரவண்டி காரைதீவு பிரதான வீதியால் சென்றுகொண்டிருந்த துவிச்சக்கரவண்டியுடன் மோதியதில் விபத்துக்குள்ளானது.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

சைக்கிளுடன் மோதிய முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி வெளியில் தடம்புரண்டு சேதத்திற்குள்ளாகியுள்ளதுடன், சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில், காரைதீவு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## வெருகல் மக்களின் நீண்டகால கோரிக்கையான தனி பொலிஸ் நிலையம் திறந்துவைப்பு




(கந்தளாய் நிருபர்)

வெருகல் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்த வெருகலுக்கான தனி பொலிஸ் நிலையம் வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் வெருகல் மக்கள் பல கிலோமீற்றர் தூரம் சென்று சேருநுவர பொலிஸ் நிலையத்திலேயே தங்களது முறைப்பாடுகளை தெரிவித்து வந்ததோடு, இவர்களுக்கான பொலிஸ் நிர்வாகமாக சேருநுவர பொலிஸ் நிலையமே காணப்பட்டது.

கடந்த வருடம் கிழக்கு மாகாண ஆளுநரிடம் வெருகல் பிரதேச மக்கள் மற்றும் வெருகல் பிரதேச செயலாளர் ஆகியோர் இவ்வேண்டுகோளை விடுத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து ஆளுநர் மேற்கொண்ட முயற்சியின் பலனாக நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## கிண்ணியா நகர சபை 39ஆவது அமர்வில் உறுப்பினர்களால் கவனயீர்ப்புப் போராட்டம்




(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிண்ணியா நகர சபையின் 39ஆவது அமர்வு நேற்று தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம் தலைமையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய நகர சபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி,

எரிபொருள் விலை ஏற்றம், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை ஏற்றம், விவசாயிகளுக்குத் தேவையான உரம், கிருமிநாசினிகள், களை நாசினிகளின் செயற்கையான தட்டுப்பாடுகள், பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாது சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர்களின் விசாரணைகளை துரிதப்படுத்தி, அவர்களுக்கான நீதியை வழங்குதல், கொரோனா தடுப்பூசி ஏற்றுவதில் கிழக்கு மாகாண மக்களின் ஆர்வம் அதிகம் என்பதால் கூடுதல் தடுப்பூசி ஒதுக்கீடுகளை செய்தல், மாகாண வைத்தியசாலைகளை மத்திய அரசின்கீழ் உள்வாங்குகின்றபோது கிண்ணியா ஆதார வைத்தியசாலை அவசியம் உள்வாங்கப்பட வேண்டும் போன்ற விடயங்களை எடுத்துக் கூறி தெளிவுபடுத்தி பேசியதோடு இவ்விடயங்களை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்து தீர்வுகளை பெற்றுத்தர வேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்தார்.

அத்தோடு சபை உறுப்பினர்கள் அனைவரும் அக்கோரிக்கைகளை ஏற்று ஒத்துழைப்புகளை வழங்கியதோடு பதாதைகளையும் ஏந்தி தமது கவனயீர்ப்பை நடத்தினர்.

மேலும், இக்கோரிக்கைகளை முன்வைத்து அவரால் தயாரிக்கப்பட்ட மகஜர் சபை சார்பாக பிரதி தவிசாளரால் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

## கல்முனை மாநகர பகுதியில் திண்மக்கழிவகற்றல் நடவடிக்கையை மேற்கொள்ள பிரதேச மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை

### கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி அர்சத் காரியப்பர்

(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் மிக வேகமாகப் பரவிவரும் கொரோனா தொற்று காரணமாக பல்வேறு அசௌகரியங்கள் உள்ளதனாலும் திண்மைக்கழிவகற்றலுக்கான மனித வலுவில் மூன்றில் ஒரு பங்கினர் மாத்திரமே இப்போது கல்முனை மாநகர சுகாதார பிரிவில் கடமையாற்றும் நிலையினாலும் திண்மக்கழிவகற்றலை சீராக செய்வதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. இதனால் திண்மக்கழிவுகளை குறைப்பதில் மக்கள் சற்று கவனம் செலுத்துமாறும், திண்மக்கழிவுகளை அகற்றும்போது நாட்டின் இப்போதைய நிலையை கவனத்திற்கொண்டு சுகாதார நடைமுறைகளை பேணி நடக்குமாறும் கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்சத் காரியப்பர் மக்களை கேட்டுக்கொண்டார்.

கல்முனை மாநகர சபையினால் திண்மக்கழிவுகள் அகற்றப்படுவதிலுள்ள சிக்கல்கள் தொடர்பில் நேற்று அவரது அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம். றக்கீப், ஆணையாளர் எம்.சி.அன்ஸார் போன்றோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் பல்வேறு சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இப்போதைய அசாதாரண சூழ்நிலையில் பல்வேறு அசௌகரியங்களுடனையே திண்மக்கழிவற்றல் நடவடிக்கை நடைபெற்று வருகிறது.

ஊழியர்கள் திண்மக்கழிவற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அவர்களுடனான இடைவெளிகளைப் பேணிக்கொள்ளுமாறும், சுகாதார நடைமுறைகளை சரியாக பின்பற்றுமாறும்



மக்களை கேட்டுக்கொண்டார்.

மேலும், பொது இடங்களில் திண்மக்கழிவுகளை வீசவேண்டாம். அவ்வாறு சமூக நலனில்லாதவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இவ்வாறானவர்கள் மூலம் பல்வேறு சிக்கல்களை கல்முனை மாநகர சுகாதார பிரிவு எதிர்கொண்டு வருகிறது.

இந்த காலகட்ட நோய் நிலைகளை கவனத்திற்கொண்டு மக்கள் ஒத்துழைப்பு நல்க முன்வரவேண்டும் என்று மேலும் மக்களை கேட்டுக்கொண்டார்.

# எரிபொருள் விலையை குறைக்கக் கோரி திருகோணமலையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - கந்தளாய் பிரதேசத்தில் எரிபொருள் விலையை உடனே குறைக்கக் கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை (22) மேற்கொள்ளப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் கந்தளாய் பிரதேச செயலகத்திற்கு எதிரில் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது அவர்கள் நடைபாதையாகச் சென்று பொதுச் சந்தைக்கு எதிரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடகம் வேண்டாம், எரிபொருள் விலையை உடனே குறை போன்ற கோஷங்களை எழுப்பியதுடன், பதாகைகளை கைகளில் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த ஆர்ப்பாட்டத்தில் 25க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் மாவட்டத்தில் மேலும் 9 கிராமசேவகர் பிரிவுகள் முடக்கம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 கிராமசேவகர் பிரிவும் கோறளைப்பற்று மத்தியில் ஒரு பிரிவு உட்பட 9 கிராமசேவகர் பிரிவுகள் நேற்று செவ்வாய்க்கிழமையில் (22) இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

இந்த நிலைமையில் தொற்றுக் குள்ளாவோர் அதிகமாக கண்டறியப்பட்ட காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள 164, 164ஏ , 164பி, 164 சி, 162 ஏ, 162பி, 167 சி, 167 பி, ஆகிய 8 கிராமசேவகர் பிரிவுகளும் முடக்கப்பட்டன.

மேலும் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பரிவிலுள்ள 206 சி. கிராமசேவகர் பிரிவு உட்பட 9 கிராமசேவகர் பிரிவுகள் இன்றிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு முடக்கப்பட்டுள்ளதுடன், மாவட்டத்தில் தற்போது 12 கிராமசேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டு முடக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

# தூக்கில் தொங்கிய நிலையில் ஆணொருவர் சடலமாக மீட்பு

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறையில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவு மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழுள்ள சம்மாந்துறை உடங்கா -02, 14ஆம் வீதியைச் சேர்ந்த 34 வயதுடைய அப்துல் றஹீம் சியாத் என்பவரே தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில், நேற்று (22) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில், மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனையில் 24 மணிநேரத்தில் 265 பேருக்கு கொரோனா

## 33 பேர் உயிரிழப்பு

(நற்பிட்டிமுனை நிருபர் சிராஜுதீன்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட 13 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 265 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித் துள்ளதோடு, இதில் 53 பேர் நிந்தவூரில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இரண்டாம் மூன்றாம் தொற்றுக்குள்ளானோர் இனங்காணப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளாக அட்டாளைச்சேனை, காரைதீவு விளங்குவதாகவும், இங்கு முறையே 36, 30 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்று நாட்களுக்கு பயணத்தடை நீக்கப்பட்டுள்ள இக்காலத்தில், எமது கணாகாணிப்பு தொடர்ந்து இடம்பெறுமெனவும் மக்கள் அவதானமாக இருந்து தமக்கும் தன் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பாதிப்பு ஏற்படாவண்ணம் சுகாதார நடைமுறைகளைப் பேணி நடந்துகொள்ளுமாறும் தவறின் இரண்டாம் அலையில் ஏற்பட்ட முடக்கங்களை சந்திக்க வேண்டியேற்படுமெனவும் ஆலோச னைகளை வழங்கியுள்ளார்.

இரண்டாவது அலையில் பாதிப்பு குறைந்தளவில் காணப்பட்ட நிந்தவூர், மத்தியமுகாம் பிரதேசங்கள் விசேட கவனத்திற்கொண்டுவரப்பட்டுள்ளதோடு, பி.சி.ஆர். அன்ரிஜன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்தியத்தில் இதுவரை 33 பேர் மரணமடைந்துள்ளதோடு, இதில் 06 பேர் சம்மாந்துறை சுகாதார வைத்தியர் பிரிவுக்குட்பட்டவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# கொரோனா பரவல் காரணமாக முடக்கப்பட்டிருந்த ஏறாவூர் 02 கிராமசேவகர் பிரிவு விடுவிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக கடந்த 6ஆம் திகதி தொடக்கம் முடக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஏறாவூர் 02 கிராமசேவகர் பிரிவு நேற்று (22) விடுவிக்கப்பட்டது.

தமது பிரதேசம் இரு வாரங்களையும் கடந்து முடக்கப்பட்டிருப்பதாக பிரதேசவாசிகள் அதிருப்தி வெளியிட்டதைத் தொடர்ந்து, ஏறாவூர் நகர சபைத் தலைவர் எம்.எஸ்.நழீம் இராணுவ உயரதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், சுகாதாரத்துறை அதிகாரிகள் ஆகியோரின் கவனத்திற்கு இந்த விடயத்தைக் கொண்டு சென்றதையடுத்து முடக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவு விடுவிக்கப்பட்டது.

முடக்கப்பட்ட பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் தற்போது மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவதாகவும் தெரிவித்த நகர சபைத் தலைவர் எம்.எஸ்.நழீம், முடக்கப்பட்டிருந்த பிரதேசத்தில் ஏறாவூர் நகர சபையினால் நகர தூய்மையாக்கல் பணிகள் தற்போது தங்குதடையின்றி முன்னெடுப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

ஏறாவூர் காட்டுப்பள்ளி வீதி, மக்காமடி வீதி, ஓடாவியர் வீதிக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் சுமார் 600 குடும்பங்களைச் சேர்ந்த 3000 பேரின் நடமாட்டமும் இயல்பு வாழ்க்கையும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக முடக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் கடைசியாக கடந்த 17, 18 ஆகிய இரு தினங்களில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 56 பேர் அடையாளம் காணப்பட்டிருந்ததோடு, பிரதேசத்தில் 3 கொரோனா வைரஸ் மரணங்கள் சம்பவித்திருந்ததாகவும் ஏறாவூர் நகர பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பாத்திமா ஷாபிறா வஸீம் தெரிவித்தார்.

# திருமலையில் வணக்கஸ்தலங்களுக்கு உலருணவுப்பொருட்கள் வழங்கிவைப்பு



(கந்தளாய் நிருபர்)

கொவிட் - 19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்திலுள்ள வழிபாட்டுத் தலங்கள் மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு உலருணவுப் பைகளை விநியோகிக்கும் திட்டமானது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரளவினால் நேற்று (22) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதல் கட்டமாக கந்தளாய் பிரதேசத்திலுள்ள பௌத்த விகாரைகள், கோயில்கள் மற்றும் பாடசாலைகளில் கடமையாற்றும் மதத் தலைவர்களுக்கு அவை வழங்கப்பட்டன. திருகோணமலை மாவட்டத்திலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் அனைத்து மக்களுக்கும் உலருணவுப்பொதிகள் வழங்கப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தென்கிழக்கு பல்கலையின் உபவேந்தராக பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் நியமனம்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக புதிய உபவேந்தராக கலை, கலாசார பீடத்தின் தற்போதைய பீடாதிபதி சாய்ந்தமருதைச் சேர்ந்த பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தராக இளம் வயதில் தெரிவுசெய்யப் பட்டிருக்கும் இவர் அதே பல்கலைக்கழகத்தின் மாணவராவார்.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவுக்குழுவின் பேரவைக்குழுவிற்கு தெரிவுக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் முதலாம் இடத்தை இவர் தக்கவைத்திருந்தார் என்பதுடன், இவர் எதிர்வரும் ஓகஸ்ட் 09 ஆம் திகதி தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாவிதன்வெளியில் 356 குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகள் வழங்கிவைப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)



நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட 20 கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 356 குடும்பங்களுக்கு கல்முனை மாநகர சபை உறுப்பினர் கே.செல்வராஜாவின் ஏற்பாட்டில் உலருணவுப்பொதிகள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று (22) பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

நாவிதன்வெளி, அன்னமலை, மத்திய முகாம், சொறிக்கல்முனை, சாளம்பைக் கேணி, வீரச்சோலை போன்ற கஷ்டப் பிரதேசங்களில் வசிக்கும் முதியோர் கொடுப்பனவைப் பெற காத்திருப்போர் பட்டியலிலுள்ளவர்கள் மற்றும் பயணத்தடை காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு இந்த நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.நிவாரண குழுவினர் பாதிக்கப்பட்டவர்கள் வசிக்கும் குறித்த பகுதிகளுக்கு கனரக வாகனங்களில் நிவாரணப் பொருட்களை நேரடியாக எடுத்துச் சென்று விநியோகித்தனர்.

# வாழ்க்கைச் செலவு பற்றிய எந்தவொரு சிந்தனையுமின்றி அரசாங்கம் எரிபொருளுக்கு விலையுயர்வை செய்துள்ளது

## இம்ரான் எம்.பி. தெரிவிப்பு



(கந்தளாய் நிருபர்)

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பொதுமக்களை இன்னல்களுக்கு உட்படுத்துகின்ற செயற்பாடுகளுக்கு எதிராக எனது குரல் என்றும் ஒலிக்கும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியுள்ளதாவது,

பொதுமக்கள் முகங்கொடுத்து வரும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு பற்றிய எந்தவொரு சிந்தனையுமின்றி அரசாங்கம் எரிபொருளுக்கு அதிகபட்ச விலையுயர்வை செய்துள்ளது. ஏற்கனவே கஷ்டங்களை அனுபவித்து வரும் பொதுமக்களுக்கு இது மேலும் சுமையைக் கூட்டியுள்ளது.

குறிப்பாக மீனவர்கள் இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, அவர்கள் மிகச் சிலருடன் சேர்ந்து சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி இந்த எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக அடையாள எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டேன்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாக எனக்கும், அந்த மீனவர்களுக்கும் எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனால் நீதிமன்றத்துக்குச் சென்று தற்போது நாம் பிணையில் வந்துள்ளோம்.

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டம், பயணத்தடை என்பன அமுலில் இருந்தாலும் நாளாந்தம் அன்றாட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. வீதிகளில் பயணம் செய்யும் வாகனங்களின் எண்ணிக்கையைக் கவனத்தில் கொண்டு இதனை நாம் அறிந்து கொள்ளமுடியும்.

இதேபோல தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் பல்வேறு வகையான நிவாரண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இங்கு சுகாதார நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டாலும் பொதுமக்களும் நிவாரணம் வழங்குகின்ற குழுவினரும் ஒன்று சேர்கின்றனர்.

ஜனாதிபதியினால் அத்தியாவசிய சேவை தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அலுவலகங்கள் இயங்குகின்றன. அலுவலக ஊழியர்களின் ஆசன அமைப்பு முறை நமக்கெல்லாம் தெரியும். வரையறுக்கப்பட்ட ஊழியர்களாக இருந்தாலும் அவர்கள் அருகருகேயுள்ள தங்களது ஆசனங்களிலிருந்து பணிசெய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அன்றாடம் எல்லா நடவடிக்கைகளுக்கும் அனுமதி இருக்கின்ற போது அரசாங்கத்திற்கு பொதுமக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை எடுத்துச் சொல்ல மட்டும் எமக்கு அனுமதியில்லை. இதுதான் அரசாங்கத்தின் கொள்கை.

அரிசி, மாவு, கடலை, பயறு உள்ளிட்ட சகல உணவுப் பொருட்களினதும் விலைகள் அதிகரித்துள்ளன. எனினும், பாமர மக்களால் வழமை போல தொழில் செய்யவோ, வருமானம் ஈட்டவோ முடியாத கட்டுப்பாட்டு நிலை காணப்படுகின்றனது. எனவே, வருமானம் இழந்துள்ள பலர் தமது நாளாந்த உணவுக்காக பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்ற இவ்வேளையில் அரசாங்கம் அதிகபட்ச எரிபொருள் விலை அதிகரிப்பை செய்துள்ளது.

கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறைகளில் தங்கியிருந்து சொகுசு வாகனங்களில் பயணிப்போருக்கு பொதுமக்களின் இந்தக் கஷ்டங்கள் தெரியாது. அவர்களுக்கு பொது மக்களின் இந்தக் கஷ்டங்கள் தெரிந்திருந்தால் எரிபொருளுக்கு இவ்வாறான அதிகபட்ச விலை உயர்வு வந்திருக்காது.

நான், எனது கட்சிக்கும் என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கும் துரோகம் இழைத்து 20க்கு ஆதரவாக வாக்களிக்க விரும்பவில்லை. அதற்காக எம்மை அடக்கி பொதுமக்களுக்கான எமது குரலை நசுக்க அரசு கவனம் செலுத்துகின்றது. இதனை பொதுமக்கள் நன்கு புரிந்து வைத்துள்ளார்கள்.

எனவே, பொதுமக்களுக்கான எமது சாத்வீகப் போராட்டம் தொடரும். பொதுமக்கள் எதிர்நோக்கும் சகல துன்பங்களிலும் நாம் கவனம் செலுத்துவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

(அமரர் ரணசிங்க பிரேமதாசவின் 97ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதையொட்டிய கட்டுரை இது)



# மறக்க முடியாத மனிதர் பிரேமதாச

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச (1924 -1993) இலங்கையின் மூன்றாவது (இரண்டாவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட) ஜனாதிபதியாக கடமையாற்றியவர்.

அதற்கு முன், ஜே.ஆர்.ஜெயவர்தன தலைமையிலான அரசாங்கத்தில் 1978 பெப்ரவரி 6 முதல் 1989 ஜனவரி 1 வரை அவர் பிரதமராக பணியாற்றினார். அடிமட்ட அரசியல் பங்கேற்புடன் பல்வேறு சவால்களை கடந்து சாதாரண ஒரு பிரஜை ஜனாதிபதியாகிய வரலாற்றிற்கு உரிமை கொண்டாடும் ரணசிங்க பிரேமதாச சிவில் சமூகத்திற்கும், கட்சி அரசியலுக்கும், கட்சி அரசியலினூடாக நாட்டின் நிலைபேறான அபிவிருத்திக்கும் பெரும் பங்காற்றியவர். பல்வேறு கட்சி உள்ளக சவால்கள், அவதூறுகள் நாடு அப்போது முகங்கொடுத்த இரு பெரும் உள்ளக கலவரங்கள், அதனால் ஏற்பட்ட சமூக பாதிப்புகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சர்வதேச இராஜதந்திரம் என்பவற்றை தனது விவேகமான சாமர்த்திய அரசியல் தீர்க்கதரிசனத்தால் வெற்றிகொண்ட ஓர் ஆளுமையாகும்.



டட்லி சேனாநாயக்கவுடன் இனைந்து  ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைக்கும் பெறுப்பை ஏற்ற அவர், அடிமட்ட வெகுஜன மக்கள் ஆதரவுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சிக் கட்டமைப்பை பலப்படுத்தியவர். அதனைத் தொடர்ந்து வந்த தேர்தல்களில் கட்சியின் வெற்றிக்கு சிங்கள பௌத்த வாக்குகளை பெற்றுக்கொடுத்தவர். அதுவரை காலமும் மேட்டுக்குடி மக்களுக்கு மாத்திரம்தான் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இடமுண்டு என்ற தோற்றத்தையும் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு தொகுதியில் வெற்றிபெற வேண்டுமென்றால் அங்கு தமிழ், முஸ்லிம் வாக்குகள்தான் தேவை என்ற தோற்றப்பாட்டையும் உடைத்து  சிங்கள வாக்குகளின் எண்ணிக்கைக் கட்டமைப்பை பலப்படுத்தியதில் பெரும் பங்காற்றியவர்.

இந்த பங்களிப்பால்தான் அரசியல் ரீதியான குறுகிய சிங்கள தேசியவாத கருத்தோட்டங்களை விதைத்து ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்கவின் சுதந்திரக் கட்சியை தோல்வியடையச் செய்தது. பண்டாரநாயாக்க விதைத்த சிங்கள தேசியவாதத்தை கிராம மட்டத்திலிருந்தே தோல்வியடைச்செய்து ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்தியவர் ரணசிங்க பிரேமதாச ஆவார். நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக பதவி ஏற்ற காலத்தில் நாட்டில் இரு வேறு பகுதிகளில் இரு வேறு கலவரங்கள் இடம்பெற்றன. இந்த இரண்டு கலவரங்களையும் முடிவிற்குக் கொண்டுவர ஜனநாயக ரீதியாக அழைப்புவிடுத்ததை இங்கு நினைவுகூருகிறேன்.

‘‘என் இரு கண்களையும் கட்டிக்கொண்டு நீங்கள் அழைக்கும் எந்தவொரு  வனாந்திரத்திற்கும் நான் வருகிறேன், ஆயுதம் இல்லாமல் பேசி தீர்த்துக்கொள்வோம் வாருங்கள்” என்று ஆயுதம் ஏந்திய இரு தரப்பிற்கும் அழைப்பு விடுத்ததை இங்கு ஞாபகப்படுத்துகிறேன்.

மக்கள் நலனை முன்னிலைப்படுத்திய ஓர் அரசியல் தலைவர் இன்றைய அரசியல் தலைவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகும். இன்று நாடு பல்வேறு ஆபத்துகளை சந்தித்துக்கொண்டிருக்கும் நிலையில், அரசாங்கம் மக்கள் மீது பல்வேறு சுமைகளை நாளுக்கு நாள் ஏற்றிவருகிறது. ஆட்சியாளர்கள் மக்கள் நலனை பிற்படுத்திய சுயநல மற்றும் நட்பு வட்டார நலனை முற்படுத்தும் விதமாக செயற்படுகிறது. நான் வேறு அரசியல் கொள்கைகளைக்கொண்ட ஓர் அரசியல்வாதியாக இருந்தாலும் இன்றைய மக்கள் விரோத ஆட்சி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அரசியல் தலைவரை பிரேமதாசவின் ‘மக்கள் நலன் மேம்பாட்டு’த் திட்டங்களை ஒருமுறை மதிப்பிட்டு அவர் முன்னெடுத்த ‘பொது நலன்களை’ சமகால சமூக தேவைகளுக்கேற்ப வடிவமைத்து முன்கொண்டு செல்லுமாறு அழைப்பு விடுக்கிறேன். தேவையுடைய மக்களுக்காக அவர் உருவாக்கிய ‘ஜனசவிய’ இன்று பெயர் மாற்றப்பட்டுள்ள ‘சமுர்த்தி’யை அரசியலாக்க வேண்டாம் என்றும் குறிப்பாக, ‘கட்சி’ அரசியலுக்குள் இதனைக் கையாள வேண்டாம் என்றும் இன்றைய அரசியல் தலைவர்களிடம் இன்றைய நினைவுநாளில் வினவிக்கொள்கிறேன்.

கிராம மட்டங்களில் பிரதேச அரசியல்வாதிகளினதோ அல்லது அதிகாரிகளினதோ பாரபட்ச கவனிப்புகளின்றி தேவையுடைய வறிய மக்களுக்குரிய உரிமை அது. அவர்களின் உரிமைகளை பாதுகாத்துப் பலப்படுத்துவது நம் அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாகும்.

குறுகிய தேசியவாதங்கள் தோற்றுப்போகும் என்பதை மறைந்த பிரேமதாசவின் வெற்றியைக்கொண்டு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அன்று ஜனாதிபதியாகி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் ஆற்றிய உரை நம் அனைவருக்கும் ஞாபகமிருக்கும் என நினைக்கிறேன். வாக்களித்த மக்களுக்கு மற்றுமன்றி அனைத்து இலங்கையர்களுக்குமான நூற்றுக்கு நூறு வீத ஜனாதிபதி என தெரிவித்து சகல மக்களுக்கும் குறிப்பாக, தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் நம்பிக்கையை ஏற்ப்படுத்தியவர். முற்போக்காக சிந்தித்து செயலாற்றியவர். சிறுபான்மை மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி தமிழ், முஸ்லிம் சமூகங்களை தேசிய அரசியல் நீரோட்டத்திற்கு அழைத்தவர் என்பதை இன்று பதிவிட விரும்புகிறேன். இவ்வாறு சென்றால் கூடிய விரைவில் தமிழ்ச் சமூகங்களின் மனங்களை ஜனநாயக ரீதியாக வென்றுவிடுவார் என்ற அச்சம் காரணமாகவே விடுதலைப் புலிகள் அவரை இலக்குவைத்துக் கொன்றனர்.

இன்றைய அரசியல் தலைவர்கள் ஒருதலைபட்சமாக பெரும்பான்மைவாதத்தை வெளிப்படையாகவே காண்பித்து தனது



ஆரம்ப அதிகார நாளிலேயே சிறுபான்மைச் சமூகங்களை தேசிய நீரோட்டத்திலிருந்து தூரமாக்கும் துரதிஷ்டவசமான குறுகிய அரசியல் பார்வைகொண்ட ஆட்சியாளர்களுக்கு பிரேமதாசவின் சிறிகொத்த உரையை முன்னுதாரணமாகக்கொள்ளுமாறு தற்போதைய ஆளும் தலைவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை மக்கள் குறித்த விசாலமான கனவென்றை கொண்டிருந்த அவர், அந்த மக்கள் பிரிவினரை பலப்படுத்துவதன் மூலம் நாட்டை துரிதமாக முன்னேக்கிக் கொண்டுசெல்ல முடியும் என்று நம்பியவர். பலமான மத்திய தர வர்க்கம் ஒன்றை உருவாக்கும் இலக்கில் குறியாக செயற்பட்டார். கட்சி அரசியலுக்கு வலுவூட்டியவர். ரணசிங்க பிரேமதாசவின் மறைவிற்குப் பின்னர் மீண்டும் தேர்தல் தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சியால் சிங்கள - பௌத்த வாக்குகளை தக்கவைக்க முடியவில்லை. மக்கள்சார் ஜனரஞ்சக தலைவராக என்றும் மக்கள் மனங்களில் இடம்பிடித்த அவரை நினைவுபடுத்துவதில் அகமகிழ்வடைகிறேன்.

இன்று நாடு அந்நியசெலாவணி பற்றாக்குறையால் தள்ளாடுகிறது. வறிய குடும்ப இளையோர் யுவதிகளுக்கு தொழில் வழங்கி அவர்களுக்கு ஓர் அபிமானத்தை ஏற்படுத்தி இன்றும் நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பெரும் பங்காற்றும் ஆடைத்தொழிற்சாலை பற்றி நோக்கும்போது ரணசிங்க பிரேமதாசவின் தூரநோக்கின் ஆழம் புலப்படுகிறது. இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் முதுகொலும்பு ஆடைத்தொழிற்சாலைகள் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

மக்களுக்கு சமீபமான அரசியல் தலைவராக இருந்தார். முற்போக்கான தேசியவாதத்தை பலமாக நம்பியவர். தமிழ் ஆயுத குழுக்களின் தாக்குதல்கள் அதிகரித்தபோது கிழக்கு முஸ்லிம்களுக்கு உடனடியாக உதவ அரச நிர்வாகக் கட்டமைப்பை பணித்ததோடு அப்பிரதேச மக்களின் பாதுகாப்பை பலப்படுத்தவும் முன்நின்றார்.

அவர் உருவாக்கிய கம் உதாவ, ஜனசவிய, கிராமோதய வேலைத்திட்டம், நடமாடும். சேவைகள், செவன அரமுதல, உனபம்பு வெட எனும் வேலைத்திட்டம், மாவதே அபி, செனவ மாபிய கெபகரு உள்ளிட்ட இன்னும் பல மக்கள் நலநோன்பல் திட்டத்தை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு பல்வேறு சவால்கள் இருந்தபோதும் மக்கள் சார்ந்து செயற்பட்ட ஓர் உண்மையான அரசியல்வாதி. அரசாங்க கட்டமைப்பிலுள்ள சகல முறைமைகளினூடாகவும்  மக்களை வலுப்படுத்தியவர். அரசாங்கம் தொடர்பான நம்பிக்கையை மக்களிடம் ஏற்படுத்தியவர்.

தன்னிடமிருந்த பௌத்த செல்வாக்கைக்கொண்டு சிறுபான்மை சமூகங்களை ஓரங்கட்டவோ, அடக்குமுறைக்குட்படுத்தவோ, அவர்களுடைய அடிப்படை உரிமைகளை பலவீனப்படுத்தவோ முற்படாத ஒரு தலைவர். இந்த நம்பிக்கைதான் ஒரு ஜனாதிபதியால் வழங்க முடியுமான உயர்ந்த விழுமியமாக இருக்கும். சகல மக்களிடமும் நம்பிக்கையை ஏற்படுத்தி நாட்டை அபிவிருத்திசெய்ய அயராது உழைத்தவர். தனது ஓய்வு நாட்களில் கூட குக்கிராமங்களில் ஏதாவது ஒரு  கம் உதாவ நிகழ்ச்சித் திட்டத்தில் இருப்பார். ஏழைகளின் துயரங்களைத் துடைக்க அயராது  உழைத்தவர். ஆட்சியில் இருக்கும் வளங்களைக்கொண்டு தனதும் தனது குடும்பத்தினதும் பொருளாதார நலன்களை பெருக்கவில்லை. தனது நட்பு வட்டார பொருளாதார நலன்களையும் பெருக்கவில்லை. இருந்ததை மக்களுக்குக் கொடுத்தார். சாதாரண மக்களுக்கும் அபிமானத்தை ஏற்படுத்தினார். தனது எதிரிகளையும் நண்பராக்கும் பொது உறவு நுட்பம் அவரிடமிருந்தது. பாகுபாடுகளை களைவதில் மார்டின் லூதர் கிங்கின் கொள்கைகளை தனது கொள்கையாக எடுத்து செயற்பட்டார்.

கட்சி அரசியலுக்கும்,நாட்டின் தேச நிர்மாணத்திற்கும், நாட்டின் தேசிய ஐக்கியத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் பிரேமதாசவின் இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். பிரேமதாச உருவாக்கிய கட்சிக் கட்டமைப்பையும், வாக்காளர் கட்டமைப்பையும் முன்கொண்டு செல்ல முடியாத ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியைதான் மூன்று தசாப்பதங்களாக காண்கிறோம்.

இன்றும் சில அரசியல் கட்சிகளுக்குள் குடும்ப வாதம், கோத்திர குல வேறுபாடுகள் பார்க்கப்படுகின்றன. இந்தக் குறுகிய பார்வைகளால் சில இரண்டாம் மூன்றாம் கட்ட தலைமைகளுக்குக் கூட இடமளிக்க முடியாத அளவு இன்று கட்சி அரசியல் சென்றுள்ள துரதிஷ்டமான நிலையைப் பார்க்கிறோம். எவ்வளவுதான் குல கோத்திர வேறுபாடுகள் காரணமாக பிற நபர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்க மறுத்தாலும் பல தசாப்த காலமாக  மேட்டுக்குடித் தலைவரால் இந்நாட்டின் அதிகாரத்தைப் பெற முடியவில்லை என்பது யதார்த்தமாகும். குல கோத்திர வேறுபாடுகள் இருந்தாலும் பிரேமதாசவின் வெற்றியை மிஞ்சிய ஓர் அடைவை மேட்டுக்குடி வர்க்கத்தால் அடையமுடியவில்லை. பிரேமதாசவின் வெகுஜன மக்கள் ஆதரவிற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் அவர் கொண்டிருந்த தூரநோக்கிற்கும் குலம் ஒரு தடை அல்ல என்பதை இங்கு நினைவூட்டுகிறேன்.

தசாப்தங்கள் பல கடந்தாலும் என்றும் மக்கள் மனதில் பிரேமதாச நிலைத்திருப்பார்.





• முஜிபுர் ரஹ்மான்
நாடாளுமன்ற உறுப்பினர்,
ஐக்கிய மக்கள் சக்தி.


# உலக செய்திகள்

# நாளை 'ஸ்ட்ரோபெரி மூனை' பார்க்கலாம்!

சூப்பர் மூன், ப்ளெட் மூன் வரிசையில் நாளை (24ஆம் திகதி) ஸ்ட்ரோபெரி மூன் என்ற பெயரில் முழு நிலவு தோன்றுகிறது.

பூமியின் வடக்கு அரைக்கோளத்தில் நிலநடுக்கோட்டுக்கு மேலேயுள்ள நாடுகளில் கோடை காலம் தொடங்குகிறது. அங்கு இரவை விட பகல்பொழுது நீளமாக இருக்கும். இளவேனில் காலம் முடிந்து இளவேனில் காலத்தின் கடைசி மற்றும் கோடை காலத்தின் முதலாவது முழு நிலவு, ஸ்ட்ரோபெரி மூன் என அங்கு அழைக்கப்படுகிறது.

ஆனால், இது சூப்பர் மூன் போல் பெரிதாக இருக்காது. பண்டைய காலத்தில் அமெரிக்க பூர்வகுடிகள் ஸ்ட்ரோபெரி அறுவடைக்குத் தயாராகும்போது தோன்றிய முழு நிலவை இந்த பெயரிட்டு அழைத்தனர். இது ஐரோப்பாவில் ரோஸ் மூன் என்றும் அழைக்கப்படுகிறது.



# டோக்கியோவில் பிரம்மிக்க வைக்கும் ஒலிம்பிக் கிராமம்!



## 11,000 வீரர்களுக்காக 23 அடுக்குமாடி குடியிருப்புகள்

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்காக கட்டமைக்கப்பட்ட ஒலிம்பிக் கிராமம் பலரையும் வியக்கவைத்துள்ளது. 44 ஹெக்டேயர் பரப்பளவு, 23 அடுக்குமாடி குடியிருப்புகள் இத்யாதி இத்யாதி என அனைத்து வசதிகளும் இங்கு ஒருங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக எந்தவொரு பெரியளவிலான போட்டியாக இருந்தாலும் விளையாட்டுக் கிராமம் அமைக்கவேண்டியது கட்டாயம். இது வேறொன்றும் இல்லை.

வீரர், வீராங்கனைகள், பயிற்சியாளர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் சகல வசதிகளுடன் ஆங்காங்கே அலையாமல் குறிப்பிட்ட ஓர் இடத்தில் தங்குவதற்காக கட்டமைக்கப்படும் பிரத்தியேக வளாகம்தான் இந்த விளையாட்டுக் கிராமம். இது போட்டிகளையொட்டி பெயர்கள் மாறுபடும். சென்னையில் 1995இல் தெற்காசிய விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டபோது எஸ்.ஏ.எவ்.எம்ஸ் வில்லேஜ் கோயம்பேட்டில் உருவாக்கப்பட்டது.

அதுபோல் தற்போது டோக்கியோ ஒலிம்பிக்கையொட்டி அங்கு டோக்கியோ விளையாட்டுக் கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது. 23 அடுக்குமாடி குடியிருப்புகள், வீரர், வீராங்கனைகள் உட்பட சுமார் 18,000 பேர் தங்குவதற்கான அறைகள், பயிற்சி மையங்கள், ஜிம், 4,500 பேர் அமர்ந்து உணவருந்தக்கூடிய மெகா டைனிங் ஹோல், ஷொப்பிங் பிளாசாக்கள், மருத்துவமனை, வணிக வளாகங்கள், தபாலகங்கள், வங்கி, கொரியர் சேவை, டிரைகிளீநர், ஏ.டி.எம்., தனி வாகனங்கள் என இல்லாத வசதிகளே இங்கில்லை.

இவை அனைத்தும் 44 ஹெக்டேயர் பரப்பளவில் பல ஆயிரம் கோடி ரூபாவை கொட்டி டோக்கியோ ஒலிம்பிக் அமைப்புக் குழு வடிவமைத்துள்ளது. ஒலிம்பிக் போட்டி தொடங்க இன்னும் ஒரு மாதத்திற்கு மேல் உள்ள நிலையில், போட்டியை நடத்த நாங்கள் தயார் என்பதை உலகிற்கு பறைசாற்றும் விதமாக பத்திரிகையாளர்களுக்கு வெளிச்சமிட்டு காட்டியுள்ளது போட்டி அமைப்புக் குழு. ஒலிம்பிக் என்றாலே பிரம்மாண்டம்தான்.

விளையாட்டு வலிமையை பறைசாற்ற ஒவ்வொரு நாட்டுக்கும் கிடைத்த அறிய வாய்ப்பு இந்த ஒலிம்பிக் போட்டி. இந்த கௌரவமிக்க திருவிழாவை 1964ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜப்பான் தற்போது மீண்டும் கையில் எடுத்திருக்கிறது. தலைநகர் டோக்கியோவில் அடுத்த மாதம் 23ஆம் திகதியிலிருந்து ஓகஸ்ட் 8ஆம் திகதிவரை இந்த கோலாகலத்தை அரங்கேற்றவுள்ளது.

கொரோனா காரணமாக கடந்த ஆண்டு ஒத்திவைக்கப்பட்ட இந்தப் போட்டியை மீண்டும் நடத்துவதற்கு ஜப்பானிலேயே எதிர்ப்புக் குரல்கள் ஓங்கி ஒலித்துவரும் நிலையிலும் திட்டமிட்டவாறு போட்டி நடத்தும் ஜப்பான் அரசின் நடவடிக்கையை விளையாட்டு ஆர்வலர்கள் வரவேற்காமல் இருக்க முடியாது.





## சர்வதேச யோகா தினம் 2021

சர்வதேச யோகா தினமான நேற்று கோவையில் கொரோனா நோயாளிகள் முழு கவச உடை அணிந்தபடி யோகா பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது....

# 5.5 கோடி டோஸ் கொவிட் தடுப்பூசி: நன்கொடையாக வழங்க அமெ. முடிவு




5.5 கோடி டோஸ் கொவிட் தடுப்பூசி மருந்துகளை உலக நாடுகளுக்கு நன்கொடையாக வழங்கும் திட்டத்தை அமெரிக்க அரசு வெளியிட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்றுக்கு எதிரான தடுப்புமருந்துகள், உலகளாவிய கோவேக்ஸ் தடுப்பூசி பகிர்வுத் திட்டத்தின் மூலம் ஏழை நாடுகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தென்னாபிரிக்கா உள்ளிட்ட பல்வேறு ஏழை நாடுகளில் தடுப்பூசி தட்டுப்பாடு நீடிக்கிறது. இதனால் அந்த நாடுகளுக்கு தடுப்பூசிகளை வழங்க வல்லரசுகள் முன்வரவேண்டுமென உலக சுகாதார அமைப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. சமீபத்தில் நடைபெற்ற ஜி7 மாநாட்டிலும் இதுகுறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், அமெரிக்காவில் இதுவரை 18 வயதுக்கு மேற்பட்டோரில் 65 சதவீதத்தினருக்கு முதல் தவணை தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அமெரிக்காவில் தேவைக்கு அதிகமான தடுப்பூசிகள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், இம்மாத இறுதிக்குள் 5.5 கோடி டோஸ் தடுப்பூசிகளை உலக நாடுகளுக்கு நன்கொடையாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதில், 1.6 கோடி தடுப்பூசிகள் ஆசிய நாடுகளுக்கு வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளதென அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உறுதியளித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த முடிவால் ஏழை நாடுகள் பயனடைய வேண்டுமென உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

# இராணுவத்தில் 8,500 குழந்தைகள்; 2,700 பேர் உயிரிழப்பு: ஐ.நா. கவலை



உலகெங்கும் இடம்பெற்ற பல்வேறு உள்நாட்டு கலவரங்களில் கடந்த ஆண்டு 8,500இற்கும் மேற்பட்ட குழந்தைகள் இராணுவ வீரர்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர். அதில் 2,700 பேர் கொல்லப்பட்டுள்ளனர் - என ஐ.நா. தலைமை செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஐ.நா. தலைமைச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குழந்தைகள் ஆயுதம் ஏந்திய போராட்டங்களில் பங்கேற்பது குறித்த ஆண்டு அறிக்கையை ஐ.நா. பாதுகாப்புச் சபை பெற்றது. உலகில் பல்வேறு நாடுகளில் கடந்த ஆண்டு இடம்பெற்ற 21 கலவரங்கள் மற்றும் ஆயுதம் ஏந்திய போராட்டங்களில் குழந்தைகளுக்கெதிராக 19,379 விதிமீறல்கள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக, சோமாலியா, ஜனநாயகக் கொங்கோ குடியரசு, ஆப்கானிஸ்தான், சிரியா, யேமன் ஆகிய நாடுகளில் கடந்த ஆண்டு அதிகமான விதிமீறல்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஆண்டு 8,521 குழந்தைகள் இராணுவப் படையில் பயன்படுத்தப்பட்டுள்ளனர். அதில், 2,674 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். 5,748 குழந்தைகள் பல்வேறு மோதல்களில் பலத்த காயமடைந்துள்ளனர்.

குழந்தைகள் கொல்லப்படுவது, துன்புறுத்தப்படுவது, கடத்தப்படுவது, போராளிகளுடன் சேர்க்கப்படுவது, உதவி வழங்கப்படாதது, பாடசாலைகள், வைத்தியசாலைகளை இலக்காகக்கொண்ட தாக்குதல் ஆகியவற்றை தடுக்கவேண்டும். இதற்கு அனைத்து நாடுகளும் அனைத்து தன்னார்வ அமைப்புகளும் முன்வரவேண்டும். - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் 3 மாநிலங்களில் டெல்ட்டா பிளஸ் வகை கொரோனா

## 50 ஆயிரத்துக்கும் கீழ் குறைந்தது இந்தியா கொரோனா தினசரி பாதிப்பு



கொரோனா வைரஸின் மரபணு மாற்ற வடிவங்களில் மிகவும் ஆபத்தானது என கருதப்படும் டெல்ட்டா பிளஸ் வைரஸ், மகாராஷ்டிரா, கேரளா மற்றும் மத்திய பிரதேசத்தில் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகாராஷ்டிராவில் 21 பேரிடம் இது பரவியுள்ளது. கேரளாவில் பாலக்காடு மாவட்டத்தில் இரண்டு பேரிடமும், பத்தனம்திட்டாவில் ஒருவரிடம் இந்த வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

மத்திய பிரதேச தலைநகரம் போபாலில் 65 வயதான பெண்மணிக்கு டெல்ட்டா பிளஸ் பாதிப்பு உறுதிசெய்யப்பட்டது.

இந்நிலையில், இந்தியாவில் நேற்றுக் காலை 8 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் புதிதாக 42,640 பேருக்கே கொரோனா பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் 1,167 பேர் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ந்து 15ஆவது நாளாக இந்தியாவின் கொரோனா பாதிப்பு ஒரு இலட்சத்துக்கும் கீழ் குறைந்துள்ளது. அதேவேளை, கடந்த மாதம் மார்ச் 23ஆம் திகதிதான் கடைசியாக 50 ஆயிரத்துக்கும் கீழ் அதாவது 47 ஆயிரம் பேருக்கு கொரோனா உறுதிசெய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் புதிதாக 53 ஆயிரம் பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்ட நிலையில், நேற்று 42 ஆயிரமாக அதாவது சுமார் 10 ஆயிரம் அளவுக்குக் குறைவாக பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியா முழுவதும் இதுவரை 2,99,77,861 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 3,89,302 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாவிட்டால் சிறைத்தண்டனை விதிக்கப்படும்

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அதிரடி உத்தரவு



பிலிப்பைன்ஸில் ''தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்ளுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும்'' என அந்நாட்டு ஜனாதிபதி Rodrigo Duterte எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிலிப்பைன்ஸில் தற்போதுவரை 13,64,239பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 23,749 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், அங்கு 4 கோடி டோஸ் பைசர் தடுப்பூசி கொள்முதல் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக 11 கோடி பேர் (11,09,94,053) கொண்ட பிலிப்பைன்ஸ் மக்கள் தொகையில் வெறும் 21 இலட்சம் பேர் மட்டுமே தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அந்நாட்டு ஜனாதிபதி Rodrigo Duterte நாட்டில் தடுப்பூசி செலுத்திக்கொள்ள மறுக்கும் மக்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

# உலகின் மிகப்பெரிய போர்க்கப்பலுக்கு அதிர்வு சோதனை நடத்திய அமெரிக்கா

## 3.9 ரிச்டர் நிலநடுக்கத்தால் குலுங்கியது புளோரிடா



உலகின் மிகப்பெரியதும், 333 மீற்றர் நீளமுள்ளதும், புதியதுமான USS Gerald R Ford போர்க்கப்பல், முழுமையான அதிர்வு சோதனைக்குட்படுத்தி அமெரிக்கா சோதித்துள்ளது.

இதுகுறித்தான வீடியோ காட்சிகளை அமெரிக்க கடற்படை வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் கிழக்கு கடலில் இந்தக் கப்பலுக்கு மிக அருகில் சுமார் 20 தொன் வெடிமருந்துகள் வெடிக்க வைக்கப்பட்டு, அதனால் ஏற்பட்ட அதிர்வுகளை கப்பல் தாங்கியதா என சோதித்து பார்க்கப்பட்டது. அப்போது வெடிமருந்துகளின் தாக்கத்தால் கடல்நீர் சிறு குன்றுபோல் மேலெழும்பியது.

சவாலான அல்லது போர்க்காலங்களில் புதிய போர்க்கப்பல்களால் தாக்குப்பிடிக்க முடியுமா என்பதை சோதிக்க இந்த அதிர்வு சோதனை நடத்தப்பட்டதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

இதனிடையே புளோரிடாவுக்கு கிழக்கே 161 கிலோமீற்றர் தொலைவில் 3.9 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதாக அமெரிக்காவின் ஜியாலஜிகல் சர்வே துறை தெரிவித்துள்ளது.

இந்தச் சோதனையின் விளைவாக நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கலாம் என சில அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



## 21ஆம் நூற்றாண்டின் சிறந்த பந்துவீச்சாளராக முரளி தெரிவு

முன்னணி விளையாட்டு தொலைக்காட்சி ஊடக நிறுவனமான ஸ்டார் ஸ்போர்ட்ஸ் ஊடக நிறுவனமானது, 21ஆம் நூற்றாண்டின் சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் சிறந்த பந்துவீச்சாளர் யார் என்பதை தெரிவுசெய்வதற்கு நடத்திய போட்டியில், 21ஆம் நூற்றாண்டின் சிறந்த பந்துவீச்சாளராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளரும், கிரிக்கெட் ஜாம்பவான்களில் ஒருவருமான முத்தையா முரளிதரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும் 21ஆம் நூற்றாண்டின் சிறந்த துடுப்பாட்ட வீரராக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரும், கிரிக்கெட் ஜாம்பவான்களில் ஒருவருமான சச்சின் டெண்டுல்கர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சிறந்த நூற்றாண்டு வீரர்களை தெரிவுசெய்வதற்கான போட்டியில் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், கிரிக்கெட் ஜாம்பவான்கள், விளையாட்டு ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 50 பேர் வாக்களித்தனர். அதனடிப்படையிலேயே சிறந்த துடுப்பாட்ட வீரராக சச்சின் டெண்டுல்கரும், சிறந்த பந்து வீச்சாளராக முத்தையா முரளிதரனும் தெரிவாகினர்.



## 60 ஆண்டுகளின் பின்னர் டெஸ்டில் ஹெட்ரிக் விக்கெட் வீழ்த்திய மஹராஜ்

தென்னாபிரிக்க - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் சுழற்பந்து வீச்சாளரான கேஷவ் மஹராஜ் ஹெட்ரிக் விக்கெட் வீழ்த்தி தென்னாபிரிக்க டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் புதிய சாதனை படைத்தார்.

குறித்த போட்டியில் தென்னாபிரிக்க அணியின் இரண்டாவது இன்னிங்ஸ் பந்துவீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கிரண் பவல், ஜேசன் ஹோல்டர் மற்றும் விக்கெட்காப்பாளர் ஜோஸ டி சில்வா ஆகிய 3 பேரையும் அடுத்தடுத்த மூன்று பந்துகளில் ஆட்டமிழக்கச்செய்து தென்னாபிரிக்க டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 60 ஆண்டுகளின் பின்னர் ஹெட்ரிக் விக்கெட் வீழ்த்திய வீரராக சாதனை படைத்தார்.

இதற்கு முன்னர் கடந்த 1960ஆம் ஆண்டு தென்னாபிரிக்க வீரரான ஜெப் கிரிபின் இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியின்போது ஹெட்ரிக் விக்கெட் வீழ்த்தியிருந்தார். தற்போது 60 வருடங்களுக்குப் பின்னர் தென்னாபிரிக்க வீரராக டெஸ்ட் கிரிக்கெட்டில் கேஷவ் மஹராஜ் ஹெட்ரிக் விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

### நாளைய போட்டிகள்




அதிகாலை 2.30 மணி
குழு 'பி'
ஈகுவாடர் *VS* பெரு

அதிகாலை 5.30 மணி
குழு 'பி'
பிரேசில் *VS* கொலம்பியா

## Euro Cup 2020 : Group B

## டென்மார்க்கின் அபார வெற்றி – பின்லாந்தின் அதிர்ச்சி தோல்வியால் பெல்ஜியம், டென்மார்க் அணிகள் அடுத்த சுற்றுக்கு நேரடியாக தகுதி



24 ஐரோப்பிய நாடுகளின் பங்கேற்புடன் நடைபெற்றுவரும் யுரோ கிண்ண கால்பந்து தொடரானது அடுத்த சுற்றை எட்டியுள்ளது. குழு 'பி'யிலிருந்து பெல்ஜியம் மற்றும் டென்மார்க் ஆகிய இரு அணிகள் அடுத்த 16 அணிகள் கொண்ட சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன. இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு நடைபெற்ற ஒரு போட்டியில் ரஷ்யா – டென்மார்க் அணிகள் மோதின.

இப்போட்டியில் டென்மார்க் அணி 4 - 1 என்ற கோல்கள் கணக்கில் அபார வெற்றிபெற்றதன் மூலம், அடுத்த சுற்றுக்கு தகுதிபெற இழந்த வாய்ப்பை மீண்டும் பெற்று, அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றிருக்கிறது. இதேவேளை, நேற்று நள்ளிரவு நடைபெற்ற குழு 'பி'யிற்கான மற்றொரு போட்டியில் பெல்ஜியம் - பின்லாந்து அணிகள் மோதின.



இந்தப் போட்டியில் பெல்ஜியம் அணி 2 - 0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றதன் மூலம் பின்லாந்து அணியின் அடுத்த சுற்றுக்கான வாய்ப்பு பறிபோனது. டென்மார்க் அணியின் அபார வெற்றி, பின்லாந்து அணியின் அதிர்ச்சி தோல்வி ஆகிய இரண்டும்தான் டென்மார்க் அணி நேரடியாக அடுத்த சுற்றுக்கு செல்வதற்கான வாய்ப்பாக அமைந்திருந்தது.

## மேற்கிந்திய தீவுகளை சொந்த மண்ணில் வீழ்த்தி டெஸ்ட் தொடரை கைப்பற்றிய தென்னாபிரிக்கா

சுற்றுலா தென்னாபிரிக்க அணிக்கும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி 2-0 என்ற அடிப்படையில் முழுமையாக கைப்பற்றியது. முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 63 ஓட்டங்களினால் அபார வெற்றிபெற்றிருந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் செயின். லூசியாவில் நிறைவுக்கு வந்தது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 298 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பதிலுக்கு தங்களுடைய முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்திய தீவுகள் அணி 149 ஓட்டங்களுக்குள் சுருண்டுபோனது.

149 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 174 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழக்க மேற்கிந்திய தீவுகள் அணியின் வெற்றி இலக்காக 324 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. குறித்த இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 165 ஓட்டங்களுக்குள் சுருண்டுபோக, தென்னாபிரிக்க அணி 158 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இவ்வாறு தொடரை 2-0 என்ற அடிப்படையில் முழுமையாக கைப்பற்றியது.




போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணியில் இளம் வேகப்பந்துவீச்சாளர் ககிஸோ ரபாடா தெரிவான அதேவேளை, தொடர் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளர் குயின்டன் டி கொக் தெரிவானார். இரு அணிகளுக்கும் இடையிலான அடுத்த தொடரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

## ஏழு வருடங்களின் பின்னர் இங்கிலாந்துடன் T20 தொடரை வெல்லுமா இலங்கை ?



**T20 சர்வதேச தொடர் இன்று ஆரம்பம் !**

சுற்றுலா இலங்கை அணிக்கும், இங்கிலாந்து அணிக்கும் இடையிலான இருதரப்பு கிரிக்கெட் தொடரின் முதல் தொடரான மூன்று போட்டிகள் இருபதுக்கு 20 சர்வதேச கிரிக்கெட் தொடர் இன்று இலங்கை நேரப்படி இரவு 11 மணிக்கு காடிஃப், சோபியா கார்டின்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இதுவரையில் 9 இருபதுக்கு இருபது சர்வதேச போட்டிகள் மாத்திரமே நடைபெற்றுள்ளன. இதில் இங்கிலாந்து அணி ஐந்து போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கும் அதேவேளை, இலங்கை அணி நான்கு போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கிறது.

இலங்கை அணி கடந்த 2014ஆம் ஆண்டின் பின்னர் இங்கிலாந்து அணியுடன் இருபதுக்கு 20 வெற்றியை தனதாக்கவில்லை. 2014ஆம் ஆண்டின் பின்னர் மூன்று இருபதுக்கு 20 போட்டிகள் நடைபெற்றிருக்கும் நிலையில் அந்த மூன்று போட்டிகளிலும் இங்கிலாந்து அணிதான் வெற்றிபெற்றிருக்கிறது. எனவே, இலங்கை அணி இங்கிலாந்துடன் இருபதுக்கு 20 வெற்றியை பெற்று 7 வருடங்களாகிறது.




இரு அணிகளுக்கும் இடையில் இறுதியாக கடந்த 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 27ஆம் திகதி கொழும்பு, ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்கு முன்னர்தான் இருபதுக்கு 20 சர்வதேச தொடர் வெற்றியொன்றை சுவைத்திருந்தது. எனவே, இங்கிலாந்து அணியுடனான தொடரை இலங்கை அணி வெற்றிகொண்டு 2 வருடங்களின் பின்னர் முதல் இருபதுக்கு 20 சர்வதேச தொடரை கைப்பற்றுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.




## டோக்கியோ ஒலிம்பிக் : 10 ஆயிரம் பார்வையாளர்களுக்கு அனுமதி

### கொரோனா அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டால் பார்வையாளர்களின் வருகைக்குத் தடை !

கொரோனா வைரஸின் கோரத்தாண்டவத்திற்கு மத்தியில் இன்னும் சரியாக 30 நாட்களில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஆரம்பமாகவுள்ள 'டோக்கியோ ஒலிம்பிக் 2020' போட்டிகளை நேரடியாக மைதானத்தில் பார்வையிட 10 ஆயிரம் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடரில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "கொரோனா சூழலை கருத்திற்கொண்டு போட்டிகள் நடைபெறும் மைதானங்களில் 10 ஆயிரம் பார்வையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். முறையான வழிகாட்டு நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்ட பின்பே மைதானங்களில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஒவ்வொரு மைதானங்களிலும் மருத்துவக் குழுக்களும் இருக்கும். ஒருவேளை கொரோனா தொற்று அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டால், பார்வையாளர்களின் வருகைக்கு தடைவிதிக்கப்படும். ஆனால், போட்டிகள் தொடர்ந்து நடைபெறும்'' - என்றுள்ளது.




### இன்றைய போட்டிகள்




நள்ளிரவு 00.30 மணி
குழு 'ஈ'
சுவீடன் *VS* போலாந்து

நள்ளிரவு 09.30 மணி
குழு 'ஈ'
ஸ்லோவாக்கியா *VS* ஸ்பெயின்

நள்ளிரவு 00.30 மணி
குழு 'எஃப்'
போர்த்துக்கல் *VS* பிரான்ஸ்

நள்ளிரவு 00.30 மணி
குழு 'எஃப்'
ஜேர்மனி *VS* ஹங்கேரி

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7